# My Computer

நமக்காக நாமே — எனது கணினி : ஆனி-ஆடி 2008

Rs 40/=

எங்களுக்கும் வேணும்

08





# முடிந்தால் வெல்லுங்கள் -07

(1)computer என்பதன் கருத்தை கூகிளில் அறிய இலகு வழி என்ன?
(2)DOS இல் புதிய Folder உருவாக்க என்ன கட்டளை?
(3)URL இனது விரிவு என்ன?
(4)Keyboard என்பதன் தமிழ்ப்பதம் என்ன?
(5)மைக்ரோசொப்ட் நிறுவனம் வாங்க முயற்சித்து தோல்வி கண்ட தளம் எது?

உங்கள் விடைகள் எம்மை வந்தடைவதற்கான இறுதித்திகதி : 28.08.2008

## முடிந்தால் வெல்லுங்கள் -06 இற்கான விடைகள்

1.Srilanka ffiletype:pdf 2.Disk Operating System 3.Intel 4004
4. கணினி செய்நிரல் 5. ஸ்ரீவ் பால்மர்

## பரிசை வெல்லும் வெற்றியாளர்கள்

5 வினாக்களுக்கும் சரியான விடைகளினை அனுப்பி குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு 6 மாத சந்தாவை வெற்றிகொள்ளும் மூன்று அதிஸ்டசாலிகள்

**ச.யோகாம்பிகை உடுவில் சுன்னாகம்**
**த.ரவிக்குமார் கண்டி வீதி சாவகச்சேரி**
**ம.சங்கீதா நெல்லியடி**

இவர்களுக்கும் சரியான விடைகளை எழுதியோருக்கும் பாராட்டுக்கள். உங்களுக்கான 6 மாத இதழ்கள் வருகின்ற 9 வது வெளியீட்டில் இருந்து அனுப்பி வைக்கப்படும்.

**சந்தா விபரம்(தபால் செலவு இலவசம்!)**

My Computer உங்கள் வீடுதேடி வர வேண்டுமா? உங்கள் முழுப்பெயர் ,முகவரி தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் சந்தாக்கட்டணத்தினை திருநெல்வேலி தபாலகத்தில் மாற்றக்கூடியதான காசுக்கட்டளையாகவோ அன்றி த.தவரூபன் என்ற பெயருக்கான காசோலையாகவோ அனுப்பிவையுங்கள் நேரில் அலுவலகத்திலும் பதிவுசெய்யலாம்.விண்ணப்பங்கள் யாவும் எமது ஆசிரியர் பீட (யாழ்ப்பாணம்) முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்

**ஒருவருடம் (12 இதழ்கள்) : 480 ரூபா ,6மாதம்(6 இதழ்கள்) : 240 ரூபா**

**விளம்பர கட்டண விபரம்**

My Computer இல் விளம்பரம் செய்ய கட்டண விபரம் இதோ
நாடு முழுவதிலுமிருந்து விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

| | முழுப்பக்கம் | 1/2 பக்கம் | 1/4 பக்கம் | 1/8 பக்கம் |
|---|---|---|---|---|
| பின் அட்டை (4 கலர்) | ரூ 8000 | ரூ 4000 | - | - |
| உள் அட்டை(1 கலர்) | ரூ 5000 | ரூ 3000 | ரூ 2000 | ரூ 1 000 |
| உள்பக்கம் (கறுப்புவெள்ளை) | ரூ 3000 | ரூ 2000 | ரூ 1000 | ரூ 500 |

# My Computer

"நமக்காக நாமே"

தமிழ் கணினிச்சஞ்சிகை

சுவடி -2 ஓலை- 8 ஆனி-ஆவணி 2008 பக்கங்கள்:40


| பக்கம் | உள்ளே... | பக்கம் | உள்ளே... |
|---|---|---|---|
| 03 | இன்ரநெற் எனும் இணையம்(7) | 20 | லேசான சாதனங்கள் |
| *05 | செல்போன் வளையுமா | 22 | விண்டோஸ் கீ பற்றி.. |
| 06 | தகவல் தொழில்நுட்பம் (பாகம் 7) | 24 | கண்ணாடியிலும் இருக்கும் |
| 08 | மின்வணிகம் (பாகம் 5) | 27 | பீஎச்பீ யும் மை எஸ் கியு எல் உம |
| 10 | எம்பி3 கிடங்கு. | 29 | கக்கிங் மூலம் காசு? |
| 11 | நகரும் மென்பொருள்கள் | 30 | கூகிளின் கதை |
| 12 | பெற்றோருக்கு ஒரு உதவி | 34 | ஒன்லைன் அகராதி |
| 13 | விசுவல்பேசிக் 6.0 (பாகம் 8) | 36 | எம்.எஸ்.டொஸ்-3 |
| 15 | கண்ணாடிக்கனவுகள் | 38 | பாடல் திரட்ட நிலைக்குமா? |
| 17 | கண்டுபிடிப்பு சோறு போடும் | 39 | கையுறைக்குள் மெட்டல் டிடெக்டர |



அனைத்து தொடர்புகளிற்கும்:

My Computer , 72/28, பணிக்கர்லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 4591871

SMS : 077 7563213

மின்னஞ்சல்:
mycomputer@speeditnet.com

இணையத்தளம்:
mycomputer.speeditnet.com

ஆசிரியர்: த.தவரூபன்
thava@speeditnet.com



வெளியீடு: SPEED IT NET
Web: speeditnet.com

# கொடுத்த வாக்கும் எடுத்த பெயரும்

தகவல் தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதுபோலவே காலமும் உருண்டோடிக்கொண்டிருக்கிறது. சென்ற வருடம் யூலை இறுதிப்பகுதியில் எமது சஞ்சிகையின் முதல் பிரதி உங்கள் கைகளில் தவழ்ந்தது. அவ்வேளை நான் வரைந்த ஆசிரியர் தலையங்கத்தில் கூறியவற்றை நினைத்துப் பார்க்கின்றேன். அதில் கூறியனவற்றிலிருந்து எள்ளளவும் நாம் விலகவில்லை என்பது வெளிப்படை. அதற்கு சான்று பகர்வது தான் இந்த எட்டாவது இதழ். உண்மையில் ஒரு வருடத்தில் 12 இதழ்கள் அல்லவா வெளிவந்திருக்க வேண்டும். அப்படியிருக்க 4 இதழ்களை தொலைத்து விட்டு கதைக்கிறீர்களா? என நீங்கள் கேட்கக் கூடும்.

எம்மைப் பொறுத்தவரை சஞ்சிகையின் தொடர்ச்சித் தன்மை, தரம் என்பனவே முன்னிலைப்படுத்தப்பட்டன. இதன்போது இடையில் ஏற்பட்ட தாமதங்களின் காரணமாக 4 இதழ்களைத் தொலைக்க வேண்டியதாயிற்று. என்ன செய்வது கல்லைக்கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்ற நிலை தான் எமக்கும். பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பல குறிப்பிட முடியாத தியாகங்கள் செய்து தான் ஒரு வருடத்தை பூர்த்தி செய்யும் இந்நாளில் 8வது இதழையாவது வெளிக்கொணர முடிந்துள்ளது.

இதுவரை எமக்கு கிடைத்த வரவேற்பு, விமர்சனங்கள் மற்றும் ஆதரவுகள் கூடவே கசப்பான அனுபவங்கள் என்றும் என்னால் மறக்க முடியாதவை. எதிர்காலத்தில் வெளியீட்டு தாமதங்களினைத் தவிர்க்க முடியுமானவரை முயல்கின்றோம். இதற்கு வாசகர்களின் ஆதரவும் எமக்கு தேவை. விளம்பரதாரர்களின் ஆதரவும் தேவை.

அன்ரிவைரஸ் தீர்வுகள், கணினி அறிவைப் பெருக்கல், புதிய கணினியை வாங்குதல், இணையப்பாவனை போன்ற விடயங்களில் மைகொம்யூட்டர் எந்த அளவிற்கு பங்களிப்பினை வழங்கியது என்பதை உங்கள் வீடுகளிலுள்ள கணினிகளும் அவற்றில் பயன்படுத்தப்படும் McAfee மென்பொருளும் சான்று பகரும்

நாம் சரியானதைச் செய்கின்றோம் பிழைகளை ஏற்றுக்கொள்கின்றோம். புதியனவற்றை கூறுகின்றோம். ஆய்ந்தறிந்து சொல்லுகின்றோம். எமது தனித்துவமான பாதையினையும் நடையினையும் நீங்கள் நன்கறிவீர்கள். எந்தவொரு காரணத்துக்காகவும் எமது தனித்துவத்தை விடுவதாக இல்லை.எமது கருத்தினை மட்டும் திணிக்கமுயலாமல் இணையவழி பெறப்பட்ட தகவல்களை எமது ஈழத்து மொழிநடையில் மொழிபெயர்த்து வழங்குவதிலும் கவனம் செலுத்துகின்றோம். Ms Office போன்ற அடிப்படைக் கணினி மென்பொருட்களினை பற்றி தமிழாக்கம் செய்து தொடர்களாக எழுதுவதை விட பயனுள்ள தகவல்களை தருவதிலும் புதிய தொழில்நுட்பங்களை உங்கள் முன் வைப்பதற்கும் முயற்சி எடுக்கின்றோம். அதுவே நீங்கள் வெளியுலகத்துடன் போட்டி போட வழிவகுக்கும் என உறுதியாக நம்புகின்றோம்.

தெரிந்து கொண்டவற்றினை நாம் கொண்ட சமூகமும் அறியவேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவோம் அப்படியானால் எம்மை சமூகம் ஒருகட்டத்தில் புறந்தள்ளிவிடுமே என பலர் பயப்படுகின்றார்கள் தமது திறமையில் நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் இவ்வாறு பயங்கொள்ளதேவையில்லை. ஒரு பொழுதும் ஒருவர் முழுமையாக மற்றொருவர் ஆகிட முடியாது ஒவ்வொருவருடைய தனித்திறமையும் விரல் அடையாளம் போன்றது. எனவே எமது சமூக முன்னேற்றத்திற்கு நாம் கொண்ட துறையில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தினூடாக பங்களிப்போமாக!

# இன்ரநெற் எனும் இணையம்-07



சென்ற முறை இணையத்தளம் ஒன்றை இணைய உலாவியில் பார்வையிடவேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும்? என சற்று பார்த்தோம். பிறவுசர் எனப்படுகின்ற இணைய உலாவியின் Address Bar (முகவரி பட்டை) இல் தெரிந்த இணையத்தளமொன்றின் முகவரியினை ரைப் செய்து Go பட்டனை அழுத்தலாம். அல்லது Enter விசை அழுத்தலாம் என பார்த்திருந்தோம்.

பலருக்குள்ள பிரச்சனை இணையத்தளங்களின் முகவரி தெரியாமையே. எமது சஞ்சிகையில் இதுவரை பல

**ஒரு நிறுவனம் பற்றியும், அவர்களின் இணையத் தளம் ஏதும் இருக்கிறதா என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். என்ன செய்யலாம்?**

இணையத்தள முகவரிகள் பற்றி கூறியிருக்கின்றோம். அவற்றினை ஒருமுறை சென்று பார்க்கலாம். ஒரு இணையத்தள முகவரியினை ரைப் செய்து அழைக்கும் போது உங்களுக்கு அந்த இணையத்தளம் உங்கள் உலாவியில் தெரியும்.

அதன் பின் என்ன செய்வது? வெறுமனே அதனை பார்த்துக்கொண்டிருப்பதா? இது ஆரம்பக்கட்டத்திலுள்ள உங்களில் பலருக்கு வரக்கூடிய கேள்வி. உங்கள் இணையத்தளப் பக்கம் சாதாரணமாக ஒரு word கோப்பு போன்று காட்சியளிக்கப்பட்டால் அதனை Scroll Bar இன் உதவியுடன் மேலே கீழே இழுத்துப் பார்க்கலாம். இணையத்தளங்களில் படங்கள் செய்திகள் வீடியோக்கள் என பலவும் காணப்படும். அத்துடன் இன்னுமொரு இணையத்தளத்துக்கான தொடுப்புக்கள் கூட காணப்படும். அது குறித்த இணையத்தளத்தின் இன்னுமொரு பக்கமாகவோ அல்லது அத்தளத்திலேயுள்ள இன்னுமொரு கட்டுரைக்கு அல்லது செய்திக்கு அல்லது படத்துக்கு உங்களைக் கொண்டு செல்லும் தொடுப்பாக இருக்கும்.

இவ்வாறான தொடுப்புக்கள் மீது உங்கள் சுட்டியினை அசைக்கும் போது அதிலே ஒரு கையின் அடையாளம் தோன்றும். அப்படித் தோன்றினால் அது ஒரு தொடுப்பு என அடையாளம் கண்டு கொள்ளலாம். அந்த தொடுப்புக்களினை கைப்பர் லிங் (Hyper link) என நாம் கூறுவதுண்டு. குறித்த கைப்பர் லிங்கில் கிளிக் செய்தால் உரிய பக்கத்துக்கு நாம் அழைத்துச் செல்லப்படுவோம். கோப்புக்கள் எதுவாயினும் தொடுப்புக் கொடுக்கப்பட்டிருப்பின் அவை பதிவிறக்கம் செய்வதற்கான அறிவுறுத்தல் சாளரம் தோன்றும். அதனைப் பின்பற்றினால் குறித்த கோப்பினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இணையத்தளங்கள் ஒரு இலத்திரனியல் புத்தகம் போலவே தோற்றமளிக்கிறது. சாதாரண புத்தகங்களில் அடுத்த பக்கத்தினைத் திறப்பதற்கு கையால்


தாளினைப் புரட்டுவீர்கள். ஆனால் இங்கு பக்கங்கள் தொடுப்புக்கள் ஊடாக இணைக்கப்பட்டிருக்கின்றன. அவை தொடுப்புக்களைக் கிளிக் செய்வதன் மூலம் திறக்கப்படலாம்.



உங்களுக்கு இணையத்தள முகவரிகள் தெரியாதவிடத்து எமது சஞ்சிகையில் காணப்படும் முகவரிகளைச் சென்று பார்வையிடுவீர்கள். அல்லது இணையத்தளங்களின் முகவரிகளை தொகுத்து வைத்திருக்கும் இணையத்தளங்களிலிருந்து இணையத்தில் குறிப்பிட்ட இணையத்தளங்களைப் பார்வையிடலாம்.

இவ்வாறான இணையத்தள முகவரிகள் கொடுத்து வைத்திருக்கும் இணையத்தளங்கள் பல உள்ளன. அவற்றில் தமிழ் இணையத்தளங்களின் தொடுப்பினை தன்னகத்தே கொண்டுள்ள இணையத்தளங்களுக்கு உதாரணமாக www.webtamilan.com, www.vembady.com, www.lankasri.com, www.tamilnatham.com, என சிலவற்றினை கூறலாம். இங்கு இந்த முகவரிகளைக் குறிப்பிட்டதற்காக இந்த இணையத்தளங்கள் யாவும் எம்முடையது என்ற முடிவுக்கு வந்துவிடாதீர்கள். எமது பார்வைக்கு எட்டிய தளங்கள் இவை அவ்வளவுதான்.

இணையத்தள முகவரிகளினை அறிந்து கொள்வதற்கான வழிகளைக்கூறினேன். சரி நீங்கள் ஒரு குறித்த விடயம் தொடர்பாக இணையத்தளங்களின் முகவரி சிக்காதா என தேடும் சந்தர்ப்பம் உண்டு. உதாரணமாக நீங்கள் Speed IT net நிறுவனம் பற்றி முன்னெப்பொழுதும் அறிந்திருக்கவில்லை. அவர்களின் இணையத்தளம் எது என்றும் அறிந்திருக்கவில்லை என வைத்துக் கொள்வோம். அப்படியிருக்க அந் நிறுவனம் பற்றியும், அவர்களின் இணையத் தளம் ஏதும் இருக்கிறதா என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். என்ன செய்யலாம். அது சுலபம். இணைய உலாவியில் www.google.com என்ற தேடு பொறி இணையத் தளத்தினை திறவுங்கள். (எப்படித் திறப்பது என முன்பே கூறி விட்டேன்.) பின் அங்கு காணப்படும் பெட்டியில் Speed IT net என ரைப் செய்து Google search என்பதை கிளிக் செய்யுங்கள். இணையப்பக்கங்களில் Speed IT net நிறுவனம் குறித்த தகவல் கொண்டுள்ள இணையத்தளங்களின் முகவரிகள் பட்டியலப்படுத்தப்படும். அவற்றில் காணப்படும் தொடுப்புக்களில் வலது கிளிக் செய்து Open in new window என்ற மெனுவில் கிளிக் செய்தால் எல்லா பக்கமும் புதிய இணைய உலாவி சாளரத்தில் தோன்றும்.



தொடர்ச்சி 18ம் பக்கம்

# செல்ஃபோன் வளையுமா?...
# புதிய வகை கைத்தொலைபேசி



**டயலொக் வேலை செய்கிறதோ இல்லையோ இங்கு வந்தால் வாங்கி அணிய நம்மூரில பலர் தயாராயிருக்கிறார்கள் என்பது உண்மை.**

எதிர்கால சாத்தியங்களாக இன்னும் பல கண்டு பிடிப்புகள் வலைதளத்தில் வளையவருகின்றன. அதில் ஒன்று வளையக்கூடிய செல்போன்!


பொதுவாக செல்போனை உள்ளங்கையில் வைத்துக்கொள்வது மாதிரி சின்னதாக ஆக்குவது தான் தொடர்ந்து வரும் தொழில்நுட்ப சவால். ஆனால், அதை வளைக்கவோ, திருகவோ முடியாது. என்.இ.சி யின் எதிர்கால செல்போன் வளையக்கூடியது. இதைக் கையில் வளையல் மாதிரி சுருட்டி மாட்டிக் கொள்ளலாம். அல்லது இடுப்பு பெல்ட்டில் மாட்டிக் கொள்ளலாம். இதற்கு “ராக்”(Tag) என்று பெயர். செல்போனின் அத்தனை சமீபத்தைய வசதிகளையும் கொண்ட இந்த போனை, தனியாக ஒரு பையில் வைத்துக்கொள்ள வேண்டும், அல்லது கழுத்தில் கயிறு கட்டித் தொங்கவிட்டுக் கொள்ளவேண்டும் என்ற அவசியமில்லை. பொக்கெட்டில் புடைத்துக் கொண்டு நிற்காமல், உங்கள் உடலின் ஒரு உபபொருளாகவே இதைத் வைத்துக்கொள்ள முடியும்.

டயலொக் வேலை செய்கிறதோ இல்லையோ இங்கு வந்தால் வாங்கி அணிய நம்மூரில பலர் தயாராயிருக்கிறார்கள் என்பது உண்மை. இதே வளையல் அமைப்பில் ஒரு டிஜிட்டல் கமராவும் வரவிருக்கிறது. “வக்கா” (Wacca) என்ற பெயருள்ள இந்த வளையலில் புகைப்படங்களைச் சேமிக்கலாம். புதுமுறை தொழில்நுட்பம் மூலம் உருவாக்கப்படும் இந்த வக்காவில், உங்கள் பார்வை தூரத்தைக் கணக்கிட்டு, உணர்ந்துகொண்டு அதற்கேற்ப புகைப்படங்களை எடுக்க முடியும். மேலும் எடுத்த படங்களையும் இதன் மூலம் பார்க்க முடியும். சேமித்துக்கொள்ளவும் முடியும்.

# அடிப்படை தகவல் தொழில்நுட்பம்-07

**ICT,GIT மாணவர்களுக்குரியது**


## Serial port (தொடர்துறை),Parallel port (சமாந்தரத்துறை),USB Port (Universal Serial Bus),வலைப்பின்னல் துறை (Internet/ Network port)




**USB Port**




**Serial Port**



**Paralell Port**



**Network Port**

சென்ற இதழில் கணினியின் பொருத்துமிடங்கள் பற்றி சிறிது சொல்லியிருந்தேன். தொடர்ந்து மிகுதி துறைகள் (Ports) பற்றியும் பார்ப்போம்.

### Serial port (தொடர்துறை)

இது வெளியிணைப்பு மொடம், பழைய வகை சுட்டி(mouse) போன்றவற்றினை கணினியுடன் இணைப்பதற்கு பயன்படுத்தப்படும். இதில் இரண்டு வகை உண்டு ஒன்று 9-pin. மற்றையது 25- pin கொண்டது. சாதாரணமாக ஒரு தொடர் துறையானது 115 கிலோ பிற் (செக்கனுக்கு) வேகத்தில் தரவு பரிமாற்றம் செய்யவல்லது.


அண்மையில் வெளிவந்த CDMA தொலைபேசிகள் இணைய இணைப்புக்காக கணினியுடன் இணைப்பதற்கு இவ்வகை Serial port கணினியில் இருக்க வேண்டும். இல்லையெனில் பிறிதாக வாங்கி இணைக்க முடியும

### Parallel port (சமாந்தரத்துறை)

இது 25 துறைகளைக் கொண்ட துறையாகும். இது பொதுவாக Printer port (அச்சுப்பொறி) என அழைக்கப்படுகின்றது. இது வெளியிணைப்பு சாதனங்களான Printer, Scanner(வருடி) ஆகியவற்றினை கணினியுடன் இணைக்கப்பயன்படும். தற்போது வெளிவரும் Scanner களும் Printer களும் USB துறை இணைப்பு கொண்டே இணைக்கப்படுகின்றன. என்பது குறிப்பிடத்தக்கது.

### USB Port (Universal Serial Bus)

இவ்வகை துறைகள் 1997ம் ஆண்டளவில்தான் அறிமுகமாகின. இவை எல்லா வகையான வெளியிணைப்பு சாதனங்களினையும் இணைக்க வல்லன. வெளியிணைப்பு கார்ட் டிஸ்க், ஸ்கானர், பிறின்ரர், சுட்டி, விசைபலகை என அனைத்தையும் உதாரணமாக கொள்ளலாம். தற்போது வெளியிணைப்பு சாதனங்களுக்கான மின்சாரத்தைக்கூட இத்துறையினூடாகவே




பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இத்துறையூடாக இணைக்கப்படும போது கணினி மீள் இயக்கம் செய்யப்படாமலேயே சாதனங்கள் இணைந்து செல்கின்றன. USB 2.0 துறை வகைகள் 2003 ஆண்டளவில் அறிமுகமாகின. தற்போது வருகின்ற அனைத்து இயங்கு தளங்களும் USB துறைகளும் சிறந்த ஒத்திசைவு வழங்குகின்றன. ஆயினும் விண்டோஸ் 98 மட்டும் சில நிபந்தனைகளுடன் கூடிய ஒத்திசைவை வழங்குகின்றது. தற்போது நம்மத்தியில் பிரபல்பலயமாகியுள்ள Flash Driver/ Thump Driver/ Pen Driver கள் என பலவாறாக அழைக்கப்படுகின்ற சிறியரக USB தரவு சேமிப்பான்கள் இத்துறையினுாடாகவே கணினியுடன் இணைகின்றன. USB துறையின் பிரபல்யத்திற்கு இவைகளின் காரணம் என்றால் மிகையில்லை. சிலர் இந்த தரவு சேமிப்பான்களை USB Driver என காரணப்பெயர் கொண்டு அழைக்கின்றனர். தற்போது கணினிகளில் குறைந்தது 4 USB துறைகளாவது இல்லாமல் இருக்காது. USB 2.0 இன் தரவு பரிமாற்ற வேகம் 480 Mbps ஆகும்.

### வலைப்பின்னல் துறை (Internet/ Network port)

இந்தத்துறை கணினியை ஒரு வலைப்பின்னலுடன் அல்லது இணையத்துடன் இணைப்பதற்கு பயன்படுத்தப்படும். இதனுடைய தரவுப்பரிமாற்ற வேகம் 10 மெகா பிற்ஸ் அல்லது 100 மெகா பிற்ஸ் ஆகும். இவ்வேகம் பொருத்தப்பட்டுள்ள துறைக்கு ஏற்ப மாறுபடும். இதில் Onboard (மதர் போட்டில் உள்ளது) அல்லது Off board (பிறிதாக இணைவது) என இரு வகை உண்டு. இங்கு நான் குறிப்பிட்டதுறைகளை விடவும் பல துறைகள் உள்ளன. அவை Sound card, Video card, Capture card போன்றவற்றில் காணப்படும். அவை உங்கள் வாழ்வில் பரீட்சையமான ஓடியோ வீடியோ மற்றும் DV துறைகள் ஆகும். இத்துறைகளை நன்கு விளங்கி வைத்திருந்தால் கணினியிலே சாதனங்கள் இணைவது இலகுவாக இருக்கும்.அடுத்த இதழில் மதர் போட் பற்றியும் அதன் பொதுவான பொருத்துமிடங்கள் பற்றியும் பார்ப்போம். (தொடரும்.)

மைக்கொம்யூட்டர் சஞ்சிகையின் முன்னைய இதழ்களினை பெற விருப்பமா சொற்ப அளவே கையிருப்பில் உள்ளது எமது அலுவலகத்தில் வந்து பெற்றுகொள்ளவும்

# மின்வணிகம் [e-commerce]


பாகம்-05 -தருவது: த.தவருபன்-

**இலங்கைக்கு அமெரிக்கா இத்தனை கோடி பண உதவி செய்வதாக பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றோமே. அப்படியானால் என்ன கப்பலில் பணத்தை கட்டி அனுப்புகிறார்களா?**

மின் வணிகத்தின் அடிப்படை விடயங்கள் வகைகள் என்பன பற்றி விரிவாக பார்த்திருக்கின்றோம். இனி மின்வணிகத்தின் பிரயோகங்கள் பற்றியும் அதன் செயல்அமைப்பு பற்றியும் கவனம் செலுத்துவோம்.

இதற்கு முன்பாக மின்வணிகம் சம்மந்தப்பட்ட தொடரறா சேவைகள் (Online Service) பற்றி சிறிது பார்ப்போம்.

•சைபர் பாங்கிங் (Cyber Banking) எனப்படுகின்ற இலத்தரனியல் வங்கி நடவடிக்கைகள். சாதாரண நிலையான வங்கிச் சேவைக்கு அப்பால் நடைபெறுகின்ற இணையவழி இலத்திரனியல் வங்கி நடவடிக்கைகள் தொடரறா சேவைகளில் முதன்மையானதாக கூறலாம்.



•தொடரறா பங்கு வர்த்தகம் (Onling securities Trading/Share Marker Business) ஆன்து கணினி மற்றும் இணையத்தினைப் பயன்படுத்தி முன்னேறிக்கொண்டிருக்கும் சேவை எனலாம்.

•தொடரறா வேலைவாய்ப்புச் சந்தை – Online Job market மூலம் இன்று உலகளாவிய ரீதியில் உடனுக்குடன் வேலைவாய்ப்புத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன.

•போக்குவரத்துச்சேவைகளில் மின்வணிகம் கொடிகட்டி பறக்கின்றதெனலாம். இங்கிருந்தே எந்த நாட்டுக்குமான பயணத்தினை இணையமூடாக ஒழுங்கு செய்யும் வசதி இதன் மூலம் கனிந்திருக்கிறது.

•வீடு,நிலம் சம்மந்தப்பட்ட Real estate துறையும் மின்வணிகம் மூலம் நன்மை பெற்ற துறை எனலாம். நீங்கள் நினைத்தால் லண்டனில் ஒரு வீட்டினை வாங்கவோ அல்லது விற்கவோ முடியும்.

•E – Channeling (மருத்துவ துறையில்) , கூரியர் சேவைகள் போன்றனவும் ஏலம் விடல் போன்ற நடவடிக்கைகளும் மின்வணிகத்தில் சாத்தியமாகிவிட்டமை குறிப்பிடத்தக்க விடயங்கள் எனலாம்.

•சந்தைப்படுத்தல்/விளம்பரம் செய்தல் போன்றன கூட மின்வணிகத்தில் சாத்தியமாகிவிட்டன. இவையெல்லாம் மின்வணிகம் சாத்தியப்படுத்திய விடயங்களாகிவிட்டன. இவையெல்லாவற்றிலும் மிகமுக்கியமான விடயம் என்னவெனில் இந்த நடவடிக்கைகளில்

பணம் எவ்வாறு கையாளப்படுகின்றது. என்பது தான் இது பற்றி இதுவரை நான் விரிவாக எதுவும் சொல்லவில்லை. கிரடிட் காட் (கடனட்டை) மூலம் பணம் செலுத்தலாம் என்றும் பெறலாம் என்றும் சொல்லியிருக்கின்றேன். எனினும் இந்த விடயத்தில் மிகவும் விபரமான விடயங்கள் தரப்பட வேண்டியிருக்கின்றது. எனவே அது பற்றி கதைத்த பின்பு மின் வணிகத்தின் பிரயோகங்கள் பற்றி விரிவாக பார்க்கலாம்.

மின்வணிகத்தில் பயன்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல் முறைகள்.

1.Cash (பணம்)

2.Cheque (காசோலை)

3.Credit card (கடனட்டை)

4.Stored Value (சேமித்து பின் செலவு செய்தல்) Debit / Smart /Prepaid card, Gift certificate

5.Accumulating Balance(சேகரிப்பு முறை)(UtilityBill payment from Account)




1)Cash : பணம்

•இது சட்டப்படியாக குறித்த நாட்டில் / பிராந்தியத்தில வரையறுக்கப்பட்டது.

•மிகப்பிரபலமானதும் பொதுவானதுமான பணப்பரிமாற்ற முறை அதிகமானதும் கூட

•எந்த விதமான இடையூறுகளுமின்றி இடுத்த வடிவத்திற்கு உடனடியாக மாற்றப்படக்கூடியது.

•கொண்டு செல்லக்கூடியது. எந்த ஒரு சிபாரிசுகளோ / அதிகாரப்படுத்தல்களோ



தேவையற்றது. உடனடி கொள்வனவு சக்தி கொண்டது.

•பணம் கொடுத்து வாங்குவதற்கு எந்த விதமான மேலதிக கட்டணங்களும் அறவிடப்பட்டிருக்க முடியாது.

இவை யாவும் பணத்தினை நேரடியாக வணிகத்தில் பயன்படுத்துவதற்குரிய ஆதரவு கருத்துக்கள்.

எந்த ஒரு விடயத்திற்கும் சிக்கல் இருக்காமல் இல்லை. அந்த வகையில் பணத்திற்கும் தடைகள் உள்ளன. அசௌகரியங்கள் உள்ளன. அவை

1)இலகுவில் களவாடப்படலாம். / தொலைந்து போகலாம்.

2)சிறிய வகை கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

3)பெரிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது கடினம்.

பெட்டியில் வைத்து கொடுக்கலாம் என ஒருவரும், ஏன் கொன்ரைனரில் வைத்து கொடுக்கலாம் என ஒருவரும் கூறலாம். அது எவ்வளவு ஆபத்தானது என்பது அக்சன் படங்கள் பார்ப்பவர்களுக்கு தெரிந்திருக்கும். இலங்கைக்கு அமெரிக்கா இத்தனை கோடி பண உதவி செய்வதாக பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றோமே. அப்படியானால் என்ன கப்பலில் கட்டி அனுப்புகிறார்களா? அது தான் இல்லை இதன் போது இந்த அச்சடித்த பணம் பயன்படாது. இலத்திரனியல் வங்கி நடவடிக்கை தான் சாத்தியம்

# தமிழ் MP3 கிடங்குகள்

தமிழ் MP3 இசை கோப்புகள் இலவசமாக பதிவிறக்கத்துக்கு இன்றைக்கு பரவலாக இணையம் எங்கும் கிடைக்கின்றது. கூகிளில் intitle:"index of" "parent directory" tamil எனத் தேடினால் அது □நேரடி□ பதிவிறக்கம் வசதியுள்ள தளங்களை வரிசையிட்டு காட்டுகின்றது.

உதாரணத்துக்கு இங்கே சில தொடுப்புகள்.

திரைப்படப்பாடல்கள்

http://tamilvenkai.com/Tamilthaalam%20Mp3%20Database/index.php?dir=Tamil%20Mp3s/http://www.tamiljukebox.com/

www.rose4you.dk/index.php?dir=01.%20Tamil/

http://www.tamilrage.net/Mp3/database/index.php?dir=

http://isaitamil.in/Tamilmp3/index.php?dir=

http://www.tamilcowboy.com/mp3/

http://sangeethamshare.org/murthy/

தமிழ் தொலைபேசி ஒலிகள்

http://www.tamiljukebox.com/mobile/index.php?dir=Ringtones/

வீடியோ பாடல்கள்

http://www.thuvi.com/songs/videofiles/tamil/

ஸ்லோகங்கள்

http://www.prapatti.com/slokas/mp3/

கிறிஸ்தவ பாடல்கள்

http://www.tamilbiblestudy.com/thewayofsalvation/index.php?dir=

இஸ்லாமிய பாடல்கள்

http://islamwap.info/

## குரல் தனியே இசை தனியே பிரிக்க

MP3 பாடல்களில் வரும் பின்னணி குரலையும், பின்னணி இசையையும் (Music) தனியாக பிரித்தெடுக்க மென்பொருள் இலவசமாக கிடைக்கிறது !.கரோகி (Karaoke) அல்லது வோக்கல் ரிமூவர் (vocal remover) எனப்படும் இம்மென் பொருள்களை பிப்வரும் தளங்களில் பெறலாம்

http://www.analogx.com/contents/download/audio/vremover.htm

http://www.karafun.com/index_en.html

## பயனுள்ள இணையத்தளங்கள்

தமிழ் இணையத்தளங்களின் தொகுப்பாக www.webtamilan.com விளங்குகிறது இதனை மட்டும் ஞாபகத்தில் வைத்திருந்தால் போதும் மொத்த தமிழ் இணையத்தளங்களும் உங்கள் வசம்

# நகரும் மென்பொருள்கள்

## (Portable Applications)

**மொத்த Microsoft Office-ஐயும் அல்லது இது போன்ற ஒரு குறிப்பிட்ட மென்பொருளை மொத்தமாய் உங்கள் USB/Flash/Pen drive-ல் வைத்து கொள்ளலாம். போகுமிடமெல்லாம் இன்ஸ்ரோல் செய்யாமலேயே பாவிக்கலாம்**




இப்போதெல்லாம் Portable Applications எனப்படும் நகரும் மென்பொருள் பொட்டலங்களுக்கு மாபெரும் வரவேற்பு. மொத்த Firefox-ஐயும் அல்லது மொத்த Microsoft Office-ஐயும் அல்லது இது போன்ற ஒரு குறிப்பிட்ட மென்பொருளை மொத்தமாய் உங்கள் USB/Flash/Pen drive-ல் வைத்து கொள்ளலாம். அவசரத்துக்கு உங்கள் அபிமான Firefox-ஐ உங்கள் நண்பர் கணினியிலிருந்து திறக்க வேண்டும் என வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் நண்பரோ Internet Explorer அபிமானி. இது போன்ற நேரங்களில் உங்கள் நண்பரின் கணினியை சிறிதும் குலைக்காதவாறு உங்கள் USB drive வழி அதில் ஏற்கனவே நீங்கள் வைத்திருக்கும் Portable Firefox-ஐ திறக்கலாம். நிறுவ தேவை இல்லை. நண்பரின் கணினியின் DLL-களோ அல்லது Registry-யோ சிறிதும் குலைக்கப்படுவதில்லை. கூடவே உங்கள் செயல்களும் பரிமாறும் தகவல்களும் இன்னும் பாதுகாப்பாகின்றன. இவை தான் போர்ட்டபிள் அப்ளிகேசன்கள். இதுபோல தினம் தினம் புது புது மென்பொருள்கள் போர்ட்டபிள் அப்ளிகேசன்களாக மாறி வருகின்றன. சொல்லப்போனால் ஒரு சிறு USB drive-ஐ ஏழைகளின் Laptop என்றாக்கலாம். சில புதிய நகரும் மென்பொருள்களினை பதிவிறக்கம் செய்ய ஒரு இணையத்தளம் இதோ http://portableapps.com/apps

ஏதாவது .com என முடியும் தளம் போகவேண்டுமா? உ-ம் yahoo.com
type yahoo, Press ctrl + enter
ஏதாவது .net என முடியும் தளம் போகவேண்டுமா? உ-ம் yahoo.net
type yahoo Press t Shift + Enter
ஏதாவது .org என முடியும் தளம் போகவேண்டுமா? உ-ம் yahoo.org
type yahoo Press ctrl + shift +Enter

# பெற்றோர்களுக்கு ஒரு HAக்கிங் உதவி

**உங்கள் பிள்ளைகள் கணிணியில் என்ன செய்கிறார்கள்? அவர்களது ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்க இதோ ஒரு சிறு இலவச மென் பொருள். இதை உங்கள் கணிணியில் நிறுவி விட்டால் உங்கள் கணிணியில் ரைப்செய்யப்படும் அனைத்தும் பதிவு செய்யப்படும்.**



ஒன்லைனில் கணினியில் தனது பிள்ளைகள் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என பேதலித்து கலங்கிபோயிருக்கும் பெற்றோர்கள் பலர் உண்டு. இணைய உலகில் புகுந்து விளையாடும் இளசுகள் வழி தவறி வலையிலிருக்கும் சிலரால் ஏமாற்றப்பட்டு சீரழிய அநேக வாய்ப்புகள்.

உங்கள் பிள்ளைகள் கணிணியில் என்ன செய்கிறார்கள்? அவர்களது ஒவ்வொரு அசைவையும் கண்காணிக்க இதோ ஒரு சிறு இலவச மென் பொருள். இதை உங்கள் கணிணியில் நிறுவி விட்டால் உங்கள் கணிணியில் ரைப்செய்யப்படும் அனைத்தும் பதிவு செய்யப்படும். பின்னால் எப்போது வேண்டுமானாலும் நீங்கள் அந்த பதிவுசெய்யபட்டுள்ள கோப்புகளை திறந்து பார்வையிட்டு நீங்கள் நிம்மதி அடைந்து கொள்ளலாம்.

இது மிகவும் ஆபத்தான மென் பொருளானதால் கவனமாக கையாளவும். ஏனெனில் அதை சரியாக கையாளாவிட்டால் நீங்களே அதில் மாட்டிக்கொள்ள வாய்ப்பு உண்டு. இன்னொரு முக்கியமான விசயம் உங்கள் கடவுச்சொற்கள்,கடனட்டை எண்கள் கூட பதிவு செய்யபட்டிருக்கும்.இதனால் தான் அலுவலக கணிணியை அல்லது வீட்டு கணினியை நீங்கள் பயன்படுத்தாத போது நிறுத்தி விடுங்கள் அல்லது பயனர் பூட்டு செய்து விடுங்கள் .

நீங்கள் அதை திறந்து விட்டுப் போனால் யாராவது இது போன்ற மென்பொருள்களை உங்கள் கணிணியில் நிறுவிவிடவாய்ப்பு உண்டு.ஆச்சர்யம் என்னவென்றால் இம்மென்பொருள் உங்கள் கணிணியில் அமைதியாக அமர்ந்திருந்து கொண்டு நீங்கள் ரைப் செய்யும் அனைத்தையும் தினமும் அந்த நபருக்கு கவனமாக ஈமெயில் செய்து கொண்டேயிருக்கும்.

கண்காணிக்கும் மென்பொருள் இதோ http://www.refog.com/keylogger/

நேரடி தொடுப்பு http://www.refog.com/files/keyspectlite.exe

# விசுவல்பேசிக் 6.0 - பாகம் 08

த.தவரூபன்

சென்ற இதழில் Function கள் பகுதியினை தொடக்கி வைத்தேன். இம்முறை அதனை தொடர்ந்து கொண்டு செல்லுவோம்.

**என்ன எல்லாம் செய்து பார்க்கிறீர்களா அல்லது புத்தகங்களை மட்டும் சேகரித்து வைக்கிறீர்களா? செய்முறைப்பயிற்சியின்றி எதுவும் பயனில்லை**


Len ()

இது அடைப்புக்குறிக்குள் இடப்படும் சொல்லிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையினைத் தரும். உதாரணமாக a=Len("Ravi") என இடப்பட்டிருந்தால் a என்பதனுள் 4 என்ற பெறுமானம் கிடைக்கும். இதனை இவ்வாறும் எழுதலாம். அதாவது strtext = "Ravi" : a = Len (strtex) என்பதாகும். இங்கு முதலில் strtext என்பதனுள் "Ravi" என்பது வழங்கப்பட்டிருக்கும். பின்பு Len() இனூடாக அது கொண்டுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை பெறப்படும்.

Abs () மட்டுப்பெறுமானம் பெறுதற்கு பயன்படும்.

a=Abs(-45) என கொடுக்கப்பட்டிருந்தால் a யானது 45 என்ற பெறுமானத்தினைத்தரும். இந்த Function வழங்கப்பட்ட உள்ளீட்டினது குறியீட்டினை கணக்கில் எடுக்காது. எதைக் கொடுத்தாலும் நேர்ப்பெறுமானமாகத் தரும்.

Asc () – ASCIT பெறுமானத்தினைத் தரும்.




பொதுவாக கணினியானது நாம் விசைப் பலகையூடு உள்ளிடும் போது நேரடியாக அந்த எழுத்தினை உள்வாங்காது. அதற்கு நமது மொழி புரியாது. இந்நிலையில் இரண்டு அடிமான(பைனரி) எண்களாகவே உணர்ந்து கொள்ளும். இதற்காக விசைப்பலகையிலுள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. முன்னர் இதற்கு ASCII பெறுமானம் என்று பெயர். அவ்விலக்கங்கள் இரண்டடிமானமாக உள்வாங்கப்பட்டு அவற்றுக்குரிய வெளியீடாக குறித்த எழுத்து தோன்றுகிறது. (தற்போது Unicode பெறுமானங்கள் வந்து விட்டன.)

சரி நமது விசைப்பலகையில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் என்ன ASCII என தெரியாதல்லவா? இந்நிலையில் குறித்த எழுத்தினை உதாரணமாக n = ASC("A") என cos () , sin() என்பன முறையே வழங்கப்பட்ட பெறுமானத்தின் cos , sin (திரிகோண கணிதம்)

இட்டால் A யிற்குரிய ASCII இலக்கம் n யிற்கு கிடைக்கும். இங்கு n யானது ஒரு மாறியாகும்.

நீங்கள் யோசிப்பீர்கள். ஏன் இவ்வாறு இலக்கங்களினை அறிய வேண்டும். அவ்வாறு அறிவதனால் என்ன பயன் என்று. ஆம். உங்கள் சந்தேகம் தீர வேண்டும். நீங்கள் விசைப்பலகையில் அழுத்தியது எந்த விசை என்று அறிந்து அதற்குரியவாறு வெளியீடுகள் பெறுவதற்கு ஒரு புறோகிறாம் எழுதலாமல்லவா? உதாரணமாக ஒரு Text box இனூடாக உங்கள் அடையாள அட்டை இலக்கத்தினை உள்ளிடும் போது "V" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் அனுமதிக்க வேண்டுமெனில் என்ன செய்வது? அதற்கு இந்த Function நிச்சயம் உதவப்போகிறது.

Chr () - இது வழங்கப்பட்ட ASCII இலக்கத்துக்கான எழுத்தை தரும். உதாரணமாக p=Chr(65) என்றிருப்பின் p யினுள் 'a' என்ற எழத்து கிடைக்கும்.

Left (text , n) - இது வழங்கப்பட்ட text இனது இடது புறத்திலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான எழுத்துக்களைக் கொண்ட சொல்லைப் பிரித்தெடுக்கும். உதாரணமாக a= Left ("Internet",3) என இருந்தால் a யினுள் "Int" என்ற சொல் பெறப்படும். அதாவது Internet என்ற சொல் இடது புறமாக ஆரம்பித்து 3 எழுத்துக்களைக் கொண்ட சொல்லைப் பிரித்து a யினுள் வழங்கும்.

Mid(text, start, number) - இது வழங்கப்பட்ட சொல்லின் குறிப்பிட்ட இடத்திலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான எழுத்துக்களைக் கொண்ட சொல்லை பிரித்து எடுக்கும். உதாரணமாக a= Mid ("Internet" ,2,3) என்றிருந்தால் "ter" என்பது a யினுள் பெறப்படும். அதாவது Internet என்ற சொல்லின் 2 ஆம் இடத்திலிருந்து ஆரம்பித்து 3 எழுத்துக்களைப் பிரித்து எடுத்துத்தரும். இங்கு முதலாம் இடம் 0 என்ற எண்ணிலிருந்து ஆரம்பிக்கும்.

Right ( text, n) இது Left Function இற்கு எதிர்மாறானது. அதாவது குறித்த சொல்லின் வலது புறத்தில் இருந்து குறித்த எண்ணிக்கையான எழுத்துக்களைக் கொண்ட சொல்லை பிரித்தெடுத்துத் தரும். உதாரணமாக a= Right ("Internet" ,3) என்றிருந்தால் a யினுள் "net" என்ற சொல் கிடைக்கும்.

Str() - இது வழங்கப்படும் இலக்கத்தினை சொல்லாக மாற்றித்தரும். உதாரணமாக a=Str (56) எனில் a யினுள் "56" என்ற சொல்லாக வழங்கப்பட்டிருக்கும். எனவே இனி மேல் a யினை கணிப்பீடுகளுக்கு பயன்படுத்த முடியாது.


Val() - இது வழங்கப்பட்ட சொல்லினை இலக்கப் பெறுமானமாக மாற்றித்தரும். உதாரணமாக a = val( "1983") என்றிருந்தால் இங்கு a யினுள் 1983 என்பது இலக்கமாக பதிவு செய்யப்படும். a யினை கணிப்பீடுகளுக்கு பயன்படுத்தலாம். இது text box இனூடாக உள்ளீடுகளைப் பெறும் போது அவற்றினை எண் பெறுமானமாக மாற்ற உதவும். மேலும் a= Val ("Ravi") என்றிருப்பின் a யினுள் பூச்சியம் தான் பெறுமதியாக கிடைக்கும்.

sqr() - இது வழங்கப்பட்ட எண் ஒன்றின் வர்க்க மூலத்தினைத் தரும். உதாரணமாக a= sqr(36) எனில் a யானது 6 என பெறுமதி பெறும்.

தொடர்ச்சி 19ம் பக்கம்

# கண்ணாடிக் கனவுகள்!

**எங்கேயாவது கண்ணாடி தென்பட்டால் போதும்... சட்டென நம் கால்கள் தயங்க, கைகள் தானாகவே தலைமுடியைக் கோதிக் கொள்ளும். முகத்தை கைக்குட்டையால் துடைத்துக் கொள்வோம். சின்னதாக ஓர் அழகுச் சிரிப்பு சிரித்துப் பார்த்துக்கொள்வோம். அவ்வளவு ஏன், அண்டங்காக்கைகூட கண்ணாடியில் அலகைத் தீட்டி அழகு பார்த்துக்கொள்ளும்!**




முகம் பார்க்கும் கண்ணாடி முன்னால் நிற்பதில், நமக்கு அலுப்பே தெரியாது. கண்ணாடி முன்னால்தான் மக்கள் அதிகம் நிற்கிறார்கள் என்றவுடனே நம் டிஜிட்டல் ஜாம்பவான்களுக்கு மூக்கில் வேர்த்துவிட்டது. இந்தக் கண்ணாடிக்கு என்ன டிஜிட்டல் பட்டுக்குஞ்சலம் கட்டலாம் என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். விளைவு, புதுப்புது சாத்தியங்கள். 'அட்மிரர்' (AddMirror) , முகம்பார்க்கும் கண்ணாடியின் மேல் விளம்பரங்களை ஓடவிடும் தொழில்நுட்பம் இது. மக்கள் முகம் கழுவி, தலைவாரிக் கொள்ளும் அந்த ஒருசில நிமிடங்களைப் பயன்படுத்தி விளம்பரங்களை அவர்களிடம் திணித்துவிட முடியும்!

அடுத்தது, டெலிவிசன் மிரர். ரி.வி. ப்ரியர்களுக்கு அல்லது வெறியர்களுக்கு என்றே உருவாக்கப்பட்ட கண்ணாடி இது. வெறும் முகம் பார்க்கும் கண்ணாடியாகத் தோற்றமளிக்கும் இது, சுவிட்ச்சை ஒன் செய்ததும் ரி.வி. திரையாக மாறிவிடும். இந்த கண்ணாடி ஒரு எல்.சி.டி. கை டெபினிசன் தொலைக் காட்சியாகும். 26 முதல் 45 இஞ்ச் வரை உள்ள இந்த கண்ணாடி தொலைக்காட்சிக்கு விதவிதமான வடிவங் களும், ஃபிரேம்களும் இருக்கின்றன.

இந்தத் கண்ணாடி தொலைக்காட்சியை எங்கே வேண்டுமானாலும் பொருத்தி, வழக்கமான தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கலாம். குளியலறை, படுக்கையறை, ஒப்பனை மேஜை என்று கண்ணாடி வைக்கப்படும் இடங்களில் எல்லாம் இனி இந்த கண்ணாடியும் இடம்பெறலாம்.

இதையெல்லாம்விட இன்னும் சூப்பரான ஒரு கண்ணாடி தொழில்நுட்பத்தை 'பிலிப்ஸ்' நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. கணவன், மனைவி இருவரும் வேலைக்குப் போகும் வீடுகளில் ஃபிரிஜ்"க்கு மேலும், ரெலிபோனுக்குக் கீழும், 'காய்கறி வாங்கிவைக்கவும்', 'பாலாவுக்கு வீட்டுப்பாடம் சொல்லிக் கொடுக்கவும்' என்று துண்டுச் சீட்டுக்களை எழுதி வைத்துவிட்டுப் போவது சகஜம். வீடு திரும்பும் கணவர் அதைப் பார்த்தால்தான் உண்டு.



இல்லையென்றால், அடுத்த நாள் மனைவியிடம் செமத்தியாக வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டியதுதான்.

இனி அந்தப் பிரச்னையே இல்லை. 'பிலிப்ஸ்' உருவாக்கியுள்ள இந்தக் கண்ணாடிக்குப் பெயர் 'இன் ரச் மெஸேஜ் போர்ட்' (In Touch Message Board). இந்தக் கண்ணாடியில் வீட்டில் உள்ள ஒவ்வொருவரின் புகைப்படமும் இருக்கும். நீங்கள் வீட்டை விட்டுக் கிளம்பும்போது உங்கள் கணவர் புகைப்படத்தைத் தொட்டு, 'வீட்டுக்கு வரும்போது, மறக்காம அர்ச்சனா ஸ்வீட்டோட வாங்க, இல்ல வரவே வராதீங்க' என்று சொன்னால் போதும். அது அப்படியே கணவரது செல்போனில் எம்.எம்.எஸ். மெஸேஜாகப் போய்ச் சேரும். வீடு வருவதும் வராததும் அவர் இஸ்டம்!

'பிலிப்ஸ்' உருவாக்கியுள்ள இன்னொரு மருத்துவக் கருவிக்குப் பெயர் 'மைஹார்ட்.' இது உங்கள் இதயத்தின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்துவர உதவும் ஒரு கருவி. இந்தக் கருவியை உங்கள் உடலோடு ஒட்டியிருக்கும் உடையில் பொருத்திக்கொள்ள வேண்டும். அதன் சிக்னல்களை எந்த ஒரு கண்ணாடியிலும் பார்க்கலாம். ஹோட்டல் ஒப்பனையறைகளில் உள்ள கண்ணாடியில்கூட, உங்கள் இதயத்தின் செயல்பாடுகளைக் காண்பிக்கும் கருவி இது.

கண்ணாடியை உபயோகிக்கும் லேட்டஸ்ட் கொன்செப்ட் ஒன்று இப்போது எல்லாரையும் ஆச்சர்யப்படுத்தி வருகிறது. "+336+ மிரர்' என்ற இந்தக் கண்ணாடியின் அருகே நீங்கள் போய் நின்றாலே போதும்... உங்கள் செல்போனில் வந்துள்ள குறுஞ்செய்தி அப்படியே கண்ணாடியில் ஒளிரும்! நீங்கள் போனை கையில் எடுக்காமலேயே உங்களுக்கு வந்துள்ள முழுச் செய்தியும் கண்ணாடியில் தெரியும். அடுத்து, அந்தக் கண்ணாடியிலேயே பதில்

தொடர்ச்சி 28ம் பக்கம்

# கண்டு பிடிப்புக்கள் சோறு போடும்!

பல தடவைகளில் நாம் இங்கே சொல்லியிருப்பது உண்மை என்பது போல் இன்றைக்கும் தகவல் தொழில் நுட்ப உலகம் இன்னோவே'ன் வித்தகர்களின் கைகளில் சிக்கிகிடக்கின்றது. வித்தியாசமாய், அனைவருக்கும் உபயோகமாய், புதுமையாய் ஒன்றை மென்பொருளறிவால் உருவாக்கினால் உலகமும் மெச்சுகின்றது பணமும் புரள்கின்றது. ஆயிரமாயிரம் உதாரணங்களை அடுக்கினாலும் இதோ ஒரு சமீபத்திய உதாரணம் R-mail.org

**நம் தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள் இறுதியாண்டு புராஜெக்ட்களுக்கு கடந்த வருடத்திய புராஜெக்ட்களிலிருந்து கட் அண்ட் பேஸ்ட் செய்வதை விட்டு விட்டு இதுமாதிரி யோசித்து புதுசுபுதுசாய் படைத்தால் நலமாயிருக்கும்.**



தனது வலைபதிவின் RSS Feed-களை ஈமெயில்களாக பலருக்கும் அனுப்ப கனடாவை சேர்ந்த Randy Charles Morin (37) என்பவர் இரு வருடங்களுக்கு முன்பு சில சேவைகளை பயன்படுத்தி பார்த்தாராம்.ஒன்றும் உருப்படியாய் வேலை செய்வது போல் தெரியவில்லையாதலால் தானே ஒரு RSS to Email வெப் பக்கத்தை உருவாக்கத் தீர்மானித்தார்.இப்பக்கத்தில் உள்ள கட்டங்களில் உங்கள் விருப்ப RSS feed url-ஐயும் உங்கள் email id-ஐயும் கொடுத்தால் போதும். எப்போதெல்லாம் புதுப் பதிவு வருகின்றதோ அப்போதெல்லாம் அப்பதிவு ஈமெயிலாக உங்களுக்கு அனுப்பப்படும்.மிகவும் இலகுவான கருத் இப்போது 50,000 பேர் இங்கு பயனர்கள், தினம் ஆயிரக்கணக்கான feed-கள் மெயில்களாக அனுப்பப்படுகின்றன.NBC என்ன நினைத்ததோ தெரியவில்லை.ஏறக்குறைய 150,000 டாலர்கள் கொடுத்து இந்த தளத்தை ராண்டியிடமிருந்து வாங்கிவிட்டது.யார் யாருக்கு என்ன பிடிக்குமென இத்தள டேட்டாபேஸிலிருந்து எளிதாய் கணிக்கலாமென NBC-க்கு தெரியும். கண்டுபிடிப்புக்களும் சோறு போடும் என்பது இன்னொரு முறை நி'ரூபிக்கப்பட்டிருக்கின்றது.




## Hacking தப்பில்லை?

Hacking என்னும் சொல் நாம் நினைப்பது போல் அவ்வளவாய் சட்டவிரோதமானதல்ல. Cracking-க்குதான் பொலிஸ் வருவார்கள்(நம்நாட்டில் இல்லை). யாருக்கும் தீமைதராவாறு தொழில்நுட்பத்தோடு ஒரு தப்பாட்டம் ஆடிப்பார்த்தல் Hacking. உதாரணத்துக்கு எந்த ஒரு சாதாரண குடிமகனும் செய்யும் ஒரு hacking தான் missed call கொடுத்தல். பெரிய மூளைகள் கொஞ்சம் அதிகமாய் சிந்தித்து தங்கள் தொழில்நுட்ப தீர்வுகள் சரியா என உறுதிபடுத்த hacking செய்வார்கள்.

## இன்ரநெற் எனும்..

4ம் பக்க தொடர்ச்சி

அவற்றில் பல Speed IT net நிறுவனத்தின் இணையத்தளங்களாக கூட இருக்கலாம். இவற்றினை நீங்கள் Address Bar இல் காணப்படும் ருசுடு களினூடாக அடையாளங்கொள்ளலாம். உதாரணத்துக்காகவே Speed IT net என தேடச் சொன்னேன். இதற்குப் பதில் Nallur, Jaffna, Srilanka என எந்த சொல்லைக் கொடுத்துத் தேடியிருந்தாலும் அந்தச் சொல் கொண்டுள்ள இணையத்தளங்களின் பட்டியல் பக்கம் பக்கமாக உங்கள் முன் தோன்றும். தமிழில் தேடவேண்டுமாயின் googletamil.com இனை நாடலாம். இவ்வாறு இணையத்தளங்களின் முகவரிகளையும் உங்களுக்கு தேவையான தகவல்களையும் இணையத்தேடுபொறிகளான google.com, yahoo.com,msn.com, altavista.com, ask.com போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.தேடல் செய்ய செய்ய தகவல்கள் உங்களுக்கு கிடைத்துக்கொண்டிருக்கும். எனவே எதனையும் இணையத்தில் தேடலாம். இது விடயத்தில் நீங்கள் கவனமாக அன்னம் போல் தொழிற்பட வேண்டும். ஏனெனில் இணையம் ஒரு திறந்த தகவல் களஞ்சியம். உங்களை அது தவறான வழிக்குக் கூட இட்டுச் செல்லும். நாம் கவனமுடன் கையாளும் போது நிறையத் தகவல்களை இந்த இணையத்திலிருந்து பயன் பெறலாம் என்பதே என் முடிவு.

## பாடல் திருட்டு..

38 ம் பக்க தொடர்ச்சி

இந்தத் தொல்லை ஏற்கனவே மேற்கில் பிரபலம்.ஒரு டொலர் தானே போனால் போகிறதுவென இது மாதிரி பாடல்களை சில்லறையாக உச்ச தர MP3 வடிவில் வாங்குகின்றார்கள். பழகியும் விட்டார்கள். இது விரைவில் நம்மூருக்கும் வரும். நமக்கும் பழகிவிடும்.
DRM-ஐ உடைக்க முடியாதா? ஏன் முடியாது? அது தான் இந்த படைப்பாளிகளுக்கெல்லாம் பயங்கர தலைவலியாய் இருக்கின்றது. உதாரணத்துக்கு பாருங்கள்.
DRM பாதுகாக்கபட்ட MP3 இசையை ஒலிபெருக்கியில் தானே கேட்கப்போகின்றோம். அதிலிருந்து வரும் இசையை ஒலிப்பதிவு செய்ய நமக்கு எவ்வளவு நிமிடம் ஆகும்?.DRM பாதுகாக்கபட்ட வீடியோவை கணினி திரையில் தானே பார்க்கப்போகின்றோம். அந்த திரையில் ஓடும் படத்தை ஒளிப்பதிவு செய்ய நமக்கு எவ்வளவு நிமிடம் ஆகும்?DRM பாதுகாக்கபட்ட Pdf மென்புத்தகத்தை கணினி திரையில் தானே படிக்கப் போகின்றோம். அந்த திரையிலிருப்பதை பிரிண்ட் ஸ்கிரீன் செய்ய நமக்கு எவ்வளவு நிமிடம் ஆகும்? மொத்தத்தில் DRM. இற்கு பெப்பே காட்ட நாங்க ரெடி
இதைத் தான் Analog Hole என்கின்றார்கள். இங்கு வீணாவது தரம் தான். திருட்டு வழியில் ஒலி-ஒளிப்பதிவு செய்யப்பட்ட கோப்புகளின் தரம் அவ்வளவு நன்றாய் இருக்காது. திருட்டு விசிடி போல கரகர சொரசொரவென்றிருக்கும்.
ஆக அப்போது கிடைக்கும் தரத்துக்காக காசு கொடுத்தாவது DRM கோப்புகளை வாங்க நாம் தயங்க மாட்டோம் என்பது என் எண்ணம்.சாப்பாடடுக்கடையில் குடிக்க தொட்டி தண்ணீரை இலவசமாய் கொடுத்தாலும் தரத்துக்காக மினரல் வோட்டர் ,சோடா காசு கொடுத்து வாங்க பழகிவிட்டோமே?

## திருத்தம்

சென்ற இதழில் பக்கம் 16 இன் இறுதி வரியுடன் 18ம் பக்க முதல் வரி சேர்க்கப்படவேண்டும் மற்றவை மாற்றமில்லை தவறுக்கு வருந்துகின்றோம்- ஆ-ர்

## விசுவல் பேசிக்....

14ம் பக்க தொடர்ச்சி

பெறுமானத்தினைக் கொடுக்கும். உதாரணமாக a= cos(90) , b= sin(180) என கொடுத்து பாருங்கள்.

Rnd - இது வித்தியாசமான Function. எழுந்தமானமான (Random) இலக்கத்தினை 0 இலிருந்து 1 இற்குள் தரவல்லது. உதாரணமாக a= Rnd என இட்டால் இது Run செய்யப்படும் ஒவ்வொரு கணத்திலும் ஒவ்வொரு பெறுமானத்தினை (0-1) a யிற்கு வழங்கும். உதாரணம் 0.8, 0.1, 0.123 என எல்லாவகையான எண்களும் இருக்கும். நீங்கள் 100 க்குள் ஒரு எழுந்தமான எண் பெற வேண்டுமாயின் வரும் விடையினை 100 இனால் பெருக்கி பெறலாமல்லவா?

Now , Date

இவையும் வித்தியாசமான Function கள் தான். உதாரணம் a = Now : b=Date முறையே a,b ஆகியன நேரத்துடன் கூடிய திகதியினையும் , வெறுமனே திகதியினையும் தரும். இவற்றை விடவும் பல Function கள் இருக்கின்றன. அவை பற்றி பின்பொரு சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன். மேலே குறிப்பிட்ட Function களின் விளைவுகளைச் செய்து பார்த்து விளங்கிக் கொள்வீர்கள் என நம்புகின்றேன். சந்தேகம் இருப்பின் எழுதுங்கள்.

## எம் எஸ் டொஸ்..

32ம் பக்க தொடர்ச்சி

இற்குப்பதிலாக /c போட்டிருந்தால் குறித்த Ravi என்ற சொல் எத்தனை Line களில் இருக்கிறது என்ற எண்ணிக்கை விபரம் காட்டப்படும்.

உதாரணமாக

கீழ்வருமாறு ரைப் செய்யப்பட்டு சேமிக்கப்பட்டுள்ள myfile.text என்ற c யிலுள்ள கோப்பிலிருந்து Ravi என்ற சொல்லை தேட மேற் சொன்ன மூன்று முறையிலும் விடை எவ்வாறு கிடைக்கும் என்பதைப் பாருங்கள்.

Hi Welcome friend
This is testing file
My Name is Ravi

இதனை C யில் Myfile .txt என்ற பெயரில் சேமிப்போம் பின் டொஸ் இல்


C:/> find /v c.:/myfile.txt என்று ரைப்செய்து அமுத்த
----------c:/myfile.txt
Hi welcome friend
This is testing file
C:/> எனவும்


C:/>find /c c:/my file.txt என்று ரைப்செய்து அமுத்த
--------------C:/myfile.txt :1
C:/> எனவும்


C:/>find /n C:/myfile.txt என்று ரைப்செய்து அமுத்த
-------------------C:/myfile.txt :2
(3) My Name is Ravi
C:/> எனவும் விடைகள் கிடைக்கும்


கொண்டுசெல்ல இலகுவானதும் நிறை குறைந்தவையு மான சாதனங்கள் தற்போது


01



02


09




08

ற்போது பிரபல்யம் அந்தவகையில் தற்போது அறிமுகமாகிய சாதனங்கள் சில உங்கள் பார்வைக்கு




03




04




05



07



06



08

## எதற்காக WINDOWS KEY?

சு. சுஜன்,உரும்பிராய்

**பொதுவாக விசைப்பலகையில் WINDOWS KEY ஒன்று அல்லது இரண்டு இருக்கும். ஆனால் இது ஏன் இருக்கிறது என்றால் பதில் கூறுபவர்கள் சிலரே. காரணம் இதன் பயன்பாட்டை நாம் அறிந்திருப்பதில்லை.**



நாம் MsDos இலிருந்து கொண்டு WINDOWS இற்குச் செல்ல WINDOWS KEY ஐ அழுத்தினால் போதும். உடனே windows DESK TOP வந்து விடும்.Task bar இல் DOS Application இருக்கும். WINDOWS KEY உடன் சில key களை வைத்து பயன்படுத்துவதால் சில WINDOWS வேலைகளை எளிதாக்கலாம். அவற்றைப் பார்ப்போம்

1) WINDOWS + E WINDOWS EXPLORERஇல் My Computer ஐ திறக்கும்.
2) WINDOWS + PAUSE / BREAK => SYSTEM PROPERTYஇல் DIALOG BOX ஐத் திறக்கும்.
3) WINDOWS + U =UTILITITY MANAGER ஐத்திறக்கும்.
4) WINDOWS + R = "Run" Prompt ஐத் திறக்கும்.
5) WINDOWS + F = Search for files & folders Window ஐத்திறக்கும்.
6) WINDOWS + Ctrl+ F Search for computers on the net work window ஐத் திறக்கும்.
7) WINDOWS + M = Open ஆகவுள்ள எல்லா Windows களையும் MINIMIZE செய்யும்.
8) WINDOWS + Shift + M = MINIMIZE செய்தவற்றை MAXIMIZE செய்யும்.
9) WINDOWS + D = எல்லா WINDOWS களையும் Dsk top இல் MINIMIZE செய்யும்.
10) WINDOWS + L = Computer I Lock செய்யும்.
11) INDOWS + b = System trayஇலுள்ள first item என்பதை தெரிவு செய்யும். இதனுடன் Enter செய்தால் தேர்வு செய்யப்பட்ட Item திறக்கும்.

WINDOWS KEY உடன் சேர்த்து தான் Short key fus பயன்னடுத்த முடியுமா? வேறேதும் உள்ளதா? என நினைப்போருக்கு இதோ சில Short cuts.

1) Alt+ Enter = தெரிவு செய்யப்பட்ட Desktop Icon Property திறக்கும்.
2) Alt + Esc = திறந்த Programme, திறக்கப்பட்ட வரிசையில் Cycle செய்யப்படும்.
3) Ctrl + Shift + Esc = WINDOWS TASK MANAGER திறக்கும்.
4) Alt +Space = Active Window இல் Corner Dialog Box I more, size, minimize, maximize, or click போன்றவற்றுக்கு வழங்கும்.
5) F2 = தேர்வு செய்யப்பட் வகை களை Rename செய்ய உதவும்.
6) F10 = Menu barஇலுள்ள Active Programme ஐதெரிவ செய்ய உதவும்.
7) Shift + F10 = தெரிவு செய்யப்பட்ட Item இற்கு வலது சொடுக்கி ( Right Click) செய்யும் வேலைகளைச் செய்யும்.
8) Ctrl + ESC = Start Menu ஐத் திறக்கும்.

இவ்வாறு சில கூட்டு Key கள் மூலம் வேலையை எளிதாக்கலாம். இத்துடன் Sticky Keys, Fillter Keys, Toggle Keys என்பன பற்றியும் பார்ப்போம்.

1) **Sticky Keys**

- சில Key களை கூட்டாக அழுத்தி வேலை செய்த பின்பு கையை எடுத்தால் அக் Key கள் தமது வேலையை மறந்துவிடும். உதாரணமாக Shift+ Ctrl என இரண்டையும் அழுத்தி ஒரு வேலையைச் செய்த பின் கையை எடுத்து விட்டால் Shift+ Ctrl தமது பணியை மறக்கும். இக்குறையை நீக்க Sticky Keys பயன்படும்.
- Shift Key ஐ ஐந்து முறை தொடர்ந்து அழுத்தினால் Sticky Keys ஆனது on/off செய்யப்படும்.
- Start-> Control panel ->Accessibility options மூலமும் Shift Key ஐ அணுகமுடியும்.

2) **Fillter Keys**

- திரும்பத் திரும்பச் செய்யும் Key Strழமந களையும் Keys இன் Repeat விகிதத்தை குறைக்கவும் Windows Filter Keys கயன்படுத்தி தடுத்துக்கொள்ளும்.
- Shift Key ஐ எட்டு முறை தொடர்ந்து அழுத்தி Fillter Keys ஐ on/off செய்யலாம்.
- Start-> Control panel -> Accessibility option மூலமும் FillterKeys ஐ அணுகலாம்.

3) **Toggle Keys**

- Toggle Keys மூலம் Capslock, Numlock, Scroll lock போன்றவற்றில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையும் அழுத்தினாலோ ஒலி எழுப்பும். Key board இல் Power கொடுத்தால் எப்படி LED Indication செய்கிறதோ அதுபோல் Toggle Keys ஒலிக்குறிப்பை வழங்கும். Num lock ஐ ஐந்து முறை அழுத்தி on/off செய்யலாம்.
- Start -> Control panel -> Accessibility option மூலம் செய்யலாம்.

---

**கூகிளின் கதை....** 30ம் பக்க தொடர்ச்சி

கொண்டது. ஆயிரக்கணக்கான x86 சேவர்களில் தாங்களே உருவாக்கியுள்ள Linux-ல் தாங்களே உருவாக்கிய வெப்சேவரில் எல்லாவற்றையும் ஓட்டுகிறார்கள்.அவர்களின் வெப் சேவர் பெயர் GWS/2.1 இது Apache-ன் கூகிள் வடிவம் என்கிறார்கள்.

கடைசியா ஒரு விசயம்! கூகிள் சேவர்கள் சுமார் 450,000-ஐயும் ஓட்ட 20 மெகாவற்கள் மின்சாரம் தேவையாம். அதாவது மாதம் கூகிளுக்கு மின்சாரக்கட்டணம் $2 மில்லியன்களுக்கும் மேல். ஆச்சரியமாயிருக்கிறதா?!!!

---

**திருத்தம்**


சென்ற இதழில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். பக்கம் 3 இல் தொடர்ச்சி 8ம் பக்கத்தில் என அச்சிடப்பட்டிருக்கவேண்டும் அதேபோல பக்கம் 35 இல் தொடர்ச்சி 25ம் பக்கத்தில் என அச்சிடப்பட்டிருக்கவேண்டும் தவறுக்கு வருந்துகின்றோம்- ஆ-ர்

# கண்ணாடியிலும் இருக்கும்... கடிகாரத்திலும் இருக்கும்!

**இப்போது எந்தப் பொருளை எடுத்தாலும் "மல்டி பேர்ப்பஸ்" எனப்படும் பலவித உபயோகம் என்பதே முக்கியமான விசய மாக இருக்கிறது. அதனால், செல்போனை எப்படி எப்படியெல்லாம் பல வகைகளிலும் பயனுள்ளதாக உருவாக்கலாம் என்பதே பெரும் போட்டியாக இருக்கிறது.**

தயாரிப்பு நிறுவனங்கள், தங்களுக்கு என தனியாக ஆய்வுத் துறைகளை வைத்துக் கொண்டிருக்கின்றன. அதேபோல் சர்வதேச அளவில் புதிய செல்போன் டிஸைன்களுக்கான போட்டிகளையும் நடத்தி, இளம் டிஸைனர்களுக்குப் பரிசுகளும் வழங்குகின்றன.

டிஸைன் பகுதி ஒருபக்கம் என்றால், அதன் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றொரு பக்கம். உள்ளங்கையில் உலகத்தையே அடக்கிவிடத் துடிக்கும் முன்னேற்றங்கள் இவை. டிஸைனும் தொழில்நுட்பமும்தான் செல்போன் துறையின் துள்ளிப்பாயும் குதிரைகள். நொக்கியா, எல்.ஜி., பான்டெக் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்து தாம் செய்துவரும் முன்னேற்றங்களை மக்களுக்கு அறிவித்து வருகின்றன. இதை 'கொன்செப்ட் போன்ஸ்' (Concept Phones) என்று அவர்கள் அழைக்கிறார்கள். முதலில் ஒரு மாதிரியாக உருவாகும் இந்த போன்கள் நாளடைவில் சந்தையின் தேவையைப் பொறுத்து, உற்பத்தி அதிகரிக்கப்படுகின்றன.



இன்று புழக்கத்தில் உள்ள அப்படிப்பட்ட செல்போன் கொன்செப்ட்கள் என்னென்ன என்று பார்க்கலாம்...

இப்போது எந்தப் பொருளை எடுத்தாலும் "மல்டி பர்ப்பஸ்" எனப்படும் பலவித உபயோகம் என்பதே முக்கியமான விசய மாக இருக்கிறது. அதனால், செல்போனை எப்படி எப்படியெல்லாம் பல வகைகளிலும் பயனுள்ளதாக உருவாக்கலாம் என்பதே பெரும் போட்டியாக இருக்கிறது.உதாரணமாக, கைக்கடிகாரம், மூக்குக் கண்ணாடி, வீட்டுச் சாவி, கத்தி இப்படி. இந்தப் பொருள்களுக்கு உள்ளேயே செல்போனையும் திணித்துவிட்டால் என்ன? செய்யலாமே! அப்படி உருவானதுதான் செல்போன் கடிகாரம், செல்போன் கண்ணாடி ஆகியவை.

இதுபோன்ற அத்தியாவசியப் பொருள்களோடு செல்போன் சேர்ந்து வந்தால், செல்போனை விரும்பாத வர்களையும் வாங்க வைத்துவிடலாம் என்பது தயாரிப்பாளர்களின் திட்டம்.




இது மணிமாலை செல்போன்...

இன்னொரு முனையில் இருந்தும் தேவை தோன்றி வருகிறது. உதாரணமாக மோட்டர் வண்டி ஓட்டுபவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இவர்கள் கையில் அணியும் கையுறை(க்ளவ்ஸ்), உடலில் போட்டுக்கொள்ளும் ஜெர்கின் ஆகியவற்றோடு செல்போன் வந்தால் எப்படி இருக்கும்? நன்றாகத்தான் இருக்கும். 'மோட்டரோலா'வுடன் இணைந்து ஒரு ஜெர்கின் தயாரிப்பு நிறுவனம், இதுபோன்றதொரு ஜெர்கின் போனை உருவாக்கியிருக்கிறது. இது 'ப்ளூடூத்' வசதியோடும் வருகிறது.

டிஜிட்டல் ஆர்வலர்கள் எப்போதுமே டிசைன் பிரியர்கள். அவர்களின் தாகத்தைத் தணிக்கவே முடியாது. 'அப்பிள்' நிறுவனத்தின் 'ஐபொட்' என்னும் சிறிய இசை கேட்கும் கருவி, பனிவெள்ளை நிறத்தில் வந்ததுகூட பலரையும் ஈர்த்துள்ளது. இப்போது எல்லாரும் பனிவெள்ளைக்கு மாறத் தொடங்கிவிட்டார்கள். 'ஐபொட்' இந்த வகையில் ஒரு டிசைன் முன்னோடியாகவே இருக்கிறது. மழமழவென கைக்குழந்தையை வைத்துக்கொள்வது மாதிரியான எளிய, கண்ணைப் பறிக்கும் டிசைன். இதன் தாக்கம் இப்போது செல்போன்களிலும் தொற்றித்கொள்ளத் தொடங்கிவிட்டது.

'பான்டெக்' சமீபத்தில் வெளியிட்டுள்ள நான்கு கொன்செப்ட் போன்களிலேயேயும் இந்தப் பனிவெள்ளைதான் பளிச்சென்று மின்னுகிறது. ஒன்று "இன்சென்ஸ்" (Incense) நமது ஊர் ஊதுவத்தி டப்பா மாதிரி இருக்கிறது. அடுத்தது கிண்ணி மாதிரி கொஞ்சம் உபபொருள்களோடு இருக்கிறது. இதற்கு வேவ்லெங்த் (Wavelength) என்று பெயர். இதில் எங்கே பேசுவது, எங்கே கேட்பது என்று 'பான்டெக்' சொன்னால்தான் தெரியும். அடுத்தது, கொஞ்சம் புரிகிற மொடல். கருமையும் வெண்மையும் கலந்து அழகான வடிவம் கொண்டுள்ளது. இதற்கு சடோ ('Shadow') என்று பெயர். சேவிங் க்ரீம் மாதிரி இருக்கும் அடுத்த மாடலுக்கு, பம்பூ (Bamboo) என்று பெயர். மெல்லிடையாள்!



மேக்கப் கிட் செல்போன்...

'நொக்கியா' நடத்திய ஒரு டிசைன் போட்டியில் 'நொக்கியா 111' என்ற மொடல் வெற்றி பெற்றது. லண்டனில் உள்ள ஒரு டிசைன் பள்ளி மாணவர் உருவாக்கிய இந்த மொடலில் உள்ள சிறப்பு, இது வீடியோ போனாக இருப்பதோடு மட்டுமல்லாமல், போட்டோ





ஃபிரேமாகவும் இருக்கும். மேலும் எங்கே போனாலும் இதைப் பக்கத்தில் உள்ள மேஜையில் உட்கார வைத்துக்கொள்ளலாம். இந்த டிஸைனை உருவாக்கிய மாணவருக்குப் பரிசு மட்டுமல்லாமல், நொக்கியா டிஸைன் குழுவில் வேலையும் கொடுக்கப் பட்டிருக்கிறது.

மேலும் இந்தப் போட்டியில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மொடல்களும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று 'கேமிங் போன்'. வீடியோ கேம்கள் விளையாடும்போது இது கண்ணாடி போன்று பயன்படும். காதில் வைத்துப் பேசும்போது போனாக செயல்படும்.

இன்னொரு அழகிய மொடல், கழுத்தில் அணிந்துகொள்ளும் மணிமாலை போன்ற செல்போன். தோழிகளிடையே பரிசுப்பொருள்களைப் பரிமாறிக் கொள்ளும்போது, இதுபோன்ற மணிமாலை போன்களைப் பரிசுகளாக வழங்கலாமாம். அந்த மாலையில் இருக்கும் ஒவ்வொரு மணியும், ஒரு குறிப்பிட்ட தோழியின் செல்போன் எண். இந்த மணியை ஒருவர் அழுத்தினால், இன்னொரு தோழியின் கழுத்து மாலையில் ஒலிக்கும் அல்லது ஒளிரும். கையில் அணிந்துகொள்ளும் மோதிரத்தையே ஸ்பீக்கர் ஆக்கியுள்ளனர். அதன் மூலம் பேசலாம். காதில் சின்ன இயர்போனை மாட்டிக்கொள்ள வேண்டும்.

இன்னொரு மொடல் போன்... கண்காணிப்புக் கமரா வாகப் பயன்படுத்தும் வகையில் உருவாகியுள்ளது.

**டிஜிட்டல் பிரியர்களின் கற்பனைக்கு அளவே இல்லை. அடிப்படையில் நாம் பயன்படுத்தும் பொருள்கள் எல்லாம் நம் ரசனையையும், ஆர்வத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்ற எண்ணம்தான் அடிப்படையில் இயங்குகிறது. எளிமை, அழகு, ஸ்டைல்... இவைதான் தாரக மந்திரம். செல்போன் தயாரிப்பு நிறுவனங்கள் போட்டிப் போடுவது இந்த அழகுக்கும், ஸ்டைலுக்கும்தான்!**

---

## திருத்தம்

சென்ற இதழில் பக்கம் 18 இல் CRT(Liquid Crystal Display) யானது நிறம் மற்றும் Resolution போன்றவற்றில் நல்ல தரமானதாக இருக்கின்ற போதிலும் என தொடங்கும் பகுதியில் CRT என்பது LCD என திருத்தப்பட வேண்டும். தவறுக்கு வருந்துகின்றோம்- ஆ-ர்


# "பீ.எச்.பீ" யும் "மை எஸ்.கியூ.எல்" உம்

-த.தவரூபன்-

01

**அறிமுகம்**

தற்காலத்தில் இணையப்பக்க வடிவமைப்பில் மிகப்பிரபல்யமானதாக திகழும் திறவூற்று ஸ்கிறிப்ட் (Opens Sorce Script) ஆகிய பி.எச்.பி(PHP) பற்றியும் அதனோடிணைந்த தரவுத்தளமான MYSQL பற்றியும் கற்பிக்கப்போகின்ற இந்த தொடரானது உங்களை ஒரு இணையத்தளவடிவமைப்பாளராக மாற்றும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை.



*இதற்கு முன்னர் பொதுவான இணையத்தள வடிவமைப்பு சம்பந்தமான மொழிகள் மற்றும் ஸ்கிறிப்ட் கள் மீது மேலோட்டமான பார்வையினை செலுத்துவது பி.எச்.பி(PHP), அதனோடிணைந்த தரவுத்தளமான MYSQL போன்றவை மேற்குறிப்பிட்டனவற்றில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பது பற்றி அறிந்துகொள்வதற்கு வழிகோலும்.*

**வேறுபாடு**

சாதாரணமாக இணையப்பக்க வடிவமைப்பு என்றவுடன் நமது எண்ணத்தில் ஓடுவது எச்.ரி.எம்.எல் எனப்படுகின்ற மீயுரை குறி மொழியாகும். நாம் பார்க்கின்ற இணையப்பக்கங்களில் தெரிகின்ற விடயங்கள் அனைத்தும் இந்த மொழியிலேயே இணைய உலவிக்கு (பிறவுசர்) வருகின்றன. இவை இணைய உலவியினால் தரம்பிரிக்கப்பட்டு உரிய வடிவில் எமக்கு காட்சிப்படுத்தப்படுகின்றன.

நாம் அழைக்கும் குறித்த பக்கம் கட்டாயம் எச்.ரி.எம்.எல் இல் எழுதப்பட்டிருக்கும் என்று சொல்லமுடியாது அது Server Side Script ஆகிய ASP, PHP, Perl, ColdFusion போன்றவற்றிலொன்றிலோ அல்லது Client Side Script ஆகிய JavaScript, Jscript, VBScript போன்றவற்றிலான்றிலோ அல்லது இவற்றை எச்.ரி.எம்.எல் உடனோ அன்றி முதற்சொன்ன எதாவது Server side Script ஒன்றுடனோ கலந்து எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் இறுதியில் அனைத்தும் எச்.ரி.எம்.எல் தான்!

## Client Side Script

சரி மேலே Server Side Script , Client Side Script என இரண்டு விடயங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தேன் அவற்றின் பொருள் என்ன? நியாயமாக உங்கள் மனதில் எழவேண்டிய கேள்வி இது. இணையத்தில் நாம் உலவியூடாக குறித்த பக்கமொன்றை அழைக்கும்போது இப்பக்கத்திற்கான உள்ளடக்கங்கள் எமது கணினியில் வைத்து எச்.ரி.எம்.எல் இற்கு மொழிமாற்றம் செய்யப்பட்டு பின்பு உரிய வகையில் காட்சிப்படுத்தப்படுமாயின் குறித்த பக்கத்தில் பயன்படுத்தப்பட்ட ஸ்கிறிப்ட்கள் Client Side Script எனப்படும்.மேலும் இவற்றில் தரவுத்தளப்(Database) பயன்பாடு இல்லை

## Server Side Script

இணையத்தில் நாம் உலவியூடாக குறித்த பக்கமொன்றை அழைக்கும் போது அப்பக்கத்தில் உள்ள ஸ்கிறிப்ட்கள் சேவர் கணினியிலேயே மாற்றங்களுக்குள்ளாக்கப்பட்டு உள்ளடக்கங்கள் எமது கணினிக்கு எச்.ரி.எம்.எல் வடிவில் அனுப்பப்பட இவை இங்கு உலவியினால் உரிய வகையில் காட்சிப்படுத்தப்படுமாயின் குறித்த பக்கத்தில் பயன்படுத்தப்பட்ட ஸ்கிறிப்ட்கள் Server Side Script எனப்படும்.இவற்றில் தரவுத்தளப்(Database) இருக்கும்

இங்கு ஒன்றை குறிப்பிடவேண்டும் அதாவது Server Side Script ஆனது பயன்படுத்தப்பட்டு ஒரு இணையப்பக்கம் வடிவமைக்கப்பட்டிருப்பின் இப்பக்கம் குறித்த Script ஆனது Run செய்யப்படக்கூடிய சேவர் கணினியில் தான் ஏற்றப்பட்டிருக்கவேண்டும் ஆனால் Client Side Script ஆனது குறித்த பக்கத்தை பார்க்கும் கணினி மற்றும் சேவர் கணினி தன்மை குறித்தோ இயங்குதளம் குறித்தோ எவ்விதமான கட்டுப்பாடுகளையும் கொண்டிராது. அதாவது சுயாதீனமானது. எந்தக்கணினியிலும் இயங்கி உள்ளடக்கங்களை காட்சிப்படுத்தக்கூடியது. எனினும் பார்க்கும் கணினியில் உள்ள உலவியின் ஸ்கிறிப்ட் ஊடுபுகவிடும் தன்மையில் செய்யப்படும் மாற்றங்கள் இதனது இயக்கத்திற்கு பங்கம் விளைவிக்கலாம்.

எது எப்படியிருந்தபோதிலும் Server Side Script இனது இயக்கத்திற்கும் நாம் அது கொண்ட பக்கத்தினை பார்க்கும் கணிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அதாவது எமது கணினியின் சூழல் எந்தவிதத்திலும் செல்வாக்கு செலுத்தமுடியாது. காரணம் அது இயங்குவது முழுக்க முழுக்க சேவர் கணினியில் தான். இங்கு வருவது வெறும் எச்.ரி.எம்.எல் தான்!

---

## ட்ரோஜன் குதிரை..

33ம் பக்க தொடர்ச்சி

அவன் பேச்சைச் சட்டை பண்ணவில்லை. குடியும் கூத்துமாக இரவு முழுவதுமாக கொண்டாடிய அவர்கள் தூக்கத்தில் வீழ்கையில் கிரேக்க வீரர்கள் குதிரையின் வயிற்றை விட்டு வெளியே வந்து ட்ரோஜன் வீரர்கள் அனைவரையும் கொன்று அந்நகரைத் தீவைத்து எரித்தனராம். கெலன் மீட்கப்பட்டு அவள் கணவன் மெனலசிடம் கொண்டு செல்லப்பட்டாள் என கதை செல்கின்றது.

ஆக கரு என்னவென்றால் நம் அன்ரைவைரஸ் மென்பொருள்கள் □உள்ளே ஆபத்து ஒளிந்திருக்கிறது□ என்று எப்பவாவது கத்தினால் உடனே நாம் உசாராக வேண்டுமாக்கும்.

---

## கண்ணாடிக்கனவுகள்...

16 ம் பக்க தொடர்ச்சி

எழுதினால், உங்களுக்கு குறுஞ்செய்தி எழுதியவருக்கு பதில் போய்ச்சேரும் முறைதான் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. விரைவில் அதுவும் வந்துவிடும்.

தொழில்நுட்ப வளர்ச்சி பற்றி எப்போதும் உள்ள விமர்சனங்களில் ஒன்று, அது தனிநபரின் சுதந்திரத்தில் தலையிடுகிறது என்பதுதான். இங்கேயும் அந்த விமர்சனம் உண்டு. ஆனால், தொழில்நுட்பம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை!

# HAக்கிங் வழி பணம் சம்பாதிக்கிறானுகள்??

**இன்றைய புகழ்பெற்ற ஸ்டோர்ம் வைரஸ் (Strom worm) உங்கள் கணிணியில் வந்து விட்டால் அவ்வளவு தான். அமைதியாய் இருந்துகொண்டு இணையம் வழி உங்களுக்கு பல விளம்பரங்களை பொப் செய்து காட்டுமாம்.**





வலையுலகில் நல்ல பசங்ககளுக்கும் கெட்டப் பசங்ககளுக்கும் உள்ள தொடர் போரில் யார் வெற்றி பெறப் போகின்றார்கள் என்பது இன்னும் சந்தேகமாகவே உள்ளது. நல்ல பசங்கள் எட்டடி பாய்ந்தால், எங்கோ கணினியே கதி என்று கிடக்கும் கெட்ட பயல்கள் பதினாறடி பாய்கின்றனர். முன்பெல்லாம் கணினி HAக்கிங் என்பது ஒரு குறிப்பிட்ட சாராரின் ஆர்வமாகவும் பொழுது போக்காகவுமே இருந்து வந்தது. இப்போது அது முற்றிலும் உருமாறி வணிக ரீதியாகிக் கொண்டிருக்கின்றது. பேட்டை ரவுடிகளைப் போல் போட்டி பொறாமை உள்ள எதிரிகள் மீது கெட்ட பசங்ககளை ஏவிவிட்டுவிட்டு பின்பு அவர்களை காசுகொடுத்து சரிபண்ணுவது வரைக்கும் வந்துவிட்டது. முன்பெல்லாம் கணிணி வைரஸ்கள் உங்கள் கணிணியை தின்பதை பார்த்து, பெரு நிறுவனங்களை கலங்கடித்ததை பார்த்து அதை உருவாக்கியோர் மகிழ்ந்தனர். அதோடு விட்டு விட்டனர். இப்போது கணிணி வைரஸ் வழியாயும் ஏதாவது காசு உழைக்க முடியுமா என்று பார்க்கின்றார்கள். விசேச நாட்கள் தோறும் மின்னஞ்சல் வாழ்த்து வடிவில் உலா வரும் இன்றைய புகழ்பெற்ற ஸ்டோர்ம் வைரஸ் (Strom worm) உங்கள் கணிணியில் வந்து விட்டால் அவ்வளவு தான். அமைதியாய் இருந்துகொண்டு இணையம் வழி உங்களுக்கு பல விளம்பரங்களை பொப் செய்து காட்டுமாம். அது வழி அதை படைத்தோர் காசு உழைக்கின்றார்கள். தினமும் 2 மில்லியன் டொலர்கள். எப்படி இருக்குது கதை.



**HAக்கிங் என்பது ஒரு குறிப்பிட்ட சாராரின் ஆர்வமாகவும் பொழுது போக்காகவுமே இருந்து வந்தது. இப்போது அது முற்றிலும் உருமாறி வணிக ரீதியாகிக் கொண்டிருக்கின்றது.**

# கூகிளின் கதை

**அன்று யாகுவிடம் விலைபோயிருந்தால் கூகிள் என்னவாயிருக்கும்?...யூகிக்க கூட இயலவில்லை**




ஸ்டான்போர்ட் பல்கலைகழக மாணவர்கள் இருவர் Larry Page-ம் Sergey Brin-னும் தங்கள் பிஎச்டி ஆய்வுக்காக விளையாட்டாக உருவாக்கிய தேடல் இயந்திரம் தான் Backrub. துவக்கத்தில் இதை உருவாக்கி முடித்ததும் இந்த தேடல் நுட்பத்தை Yahoo போன்ற பெரும் தலைகள் யாருக்காவது விற்கலாம் என முடிவெடுத்தனர். வாங்க யாரும் இல்லாததால் 1998-ல் Google என்ற கம்பனி உருவானது. 1998 நவம்பரில் தான் கூகிள் இணையதளம் முதலாக தலைக்காட்ட தொடங்கியிருந்தது. ஆரம்பத்தில் பணம் ஒன்றும் அவ்வளவாய் சம்பாதிக்க இயலவில்லை. Sun-னும் IBM-மும் சில Sun Ultra II,F50 IBM RS/6000 சேவர்களை தானமாக வழங்கியிருந்தனர். 2001-ல் யாகூ கூகிளை வாங்க விலைப்பேசி கொண்டிருந்ததாம். தேடல் இயந்திரத்தின் வலிமை அறியா யாகூ ஒரு தேடல் இயந்திரத்துக்கு இத்தனை விலையா ($5 Billion) என ஒதுங்கி விட்டது. (அன்று யாகுவிடம் விலைபோயிருந்தால் கூகிள் என்னவாயிருக்கும்?...யூகிக்க கூட இயலவில்லை.)

2004-ல் கூகிள் பங்குகள் வெளியான போது விளம்பரம் இல்லா இந்த வெற்று முகப்பு பக்கம் கொண்ட தளம் எப்படி பணம் உருவாக்க போகுது என எல்லாரும் வியந்தனர். அந்த ஆண்டு முதற்பாதியில் மட்டும் $1.4 billion சம்பாதித்தது கூகிள். இன்று இது $6.1 billion கம்பனி. இதன் Data center 450,000 க்கும் மேலாக சேவர்கள்

தொடர்ச்சி 23ம் பக்கம்

# எம்.எஸ்.டொஸ் (MS DOS)-03

-கொம்யூட்டர் ஜி-

பல முக்கிய DOS கட்டளைகளைப் பார்த்திருக்கிறோம். தொடர்ந்து இம்முறை மேலும் பயனுள்ள முக்கிய கட்டளைகளை பார்ப்போம்.

**கோப்பு ஒன்றின் பெயரை மாற்றுதல்.**

கட்டளை : Ren

முறை : ren (கோப்பின் பெயர்) (புதிய பெயர்)

உதாரணம்: ren c:/test.txt newtest.txt

Run இல் Cmd என ரைப் செய்து பெறப்பட்ட சாளரத்தில் மேற்கூறியவாறு ரைப் செய்து Enter செய்தால் C டிறைவரினுள் இருந்த test.txt ஆனது newtest.txt என பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கும்.

சரி ren c:/test.* newtest.* என இட்டிருந்தால் என்ன நிகழும்? C யினுள் test என்ற பெயரிலிருக்கும் எல்லா கோப்புகளினையும் newtest என பெயர் மாற்றியிருக்கும். இவ்வாறே C:/*.txt, C:/*.html என இட்டிருந்தால் C யில் உள்ள அனைத்து txt கோப்புக்களையும் html கோப்புக்களாக மாற்றிவிடும் தயவுசெய்து இவற்றை செய்து பார்க்கும்போது கவனமாக செயற்படுங்கள்

**கோப்பின் தன்மை மாற்றுதல் / பார்வையிடல்.**

கட்டளை : attrib

முறை : attrib[+r/-r] கோப்பின் பெயர்

உதாரணம்: attrib +rc:/myfile.txt என ரைப் செய்தால் குறித்த Driver இனுள் உள்ள myfile.txt என கோப்பு வாசிக்கப்படும். என்ற நிலைக்கு (Read Only) மாற்றப்படும்.

பின்வரும் பெறுமானங்கள் அந்தந்த நிலை மாற்றங்களிற்கு பயன்படத்தப்படும்.

+r வாசிக்க மட்டும் (Read Only)

-r வாசிக்கவும் எழுதவும் (Read and Write)

+h மறைக்கச்செய்தல் (Hide)


-h தெரியச்செய்தல் (Show)

DOS கட்டளைகள் பிரயோகிக்கும் போது கோப்புக்களின் பெயர்களினையும் கோப்புறை (Folder) களை எழுதும் போது ? , * போன்ற குறியீடுகளையும் பயன்படுத்தலாம். ? பயன்படுத்தினால் அந்த எழுத்துக்குப்பதிலாக எந்தவொரு எழுத்தும் பிரதியீடு செய்யப்படலாம். என்று பொருள்.

உதாரணம் test?file.txt என்றிருந்தால் test1file.txt அல்லது text2file.text ஆக எதுவாயினும் இருக்கலாம் என்று பொருள். இவ்வாறு எந்த எழுத்தினையும் இடையில் போடப்பட்டுள்ள எல்லா கோப்புக்களும் என பொருள்படும்.

அதே போல் * இருந்தால் அந்த இடத்திலிருந்து இறுதி பகுதிவரைஎதுவும் காணப்படலாம் என்று பொருள்.

உதாரணம் myfile.*txt என்றோ myfile.* என்றோ இருந்தால் * இற்கு பதிலாக எந்த எழுத்தோ சொல்லோ இருக்கலாம். எனவே முறையே myfile.txt என்றோ myfile.txt,




myfile.html என எதுவாயினும் பதிலீடு செய்யப்படலாம். "-" இனை அடுத்துவரும் மூன்று எழுத்துக்களும் File Extension என்பது நீங்கள் அறிந்ததே.

உதாரணம் attrib +h c:/.*txt என்றிருந்தால் c யிலுள்ள எல்லா txt கோப்புக்களும் மறைக்கப்பட்டுவிடும்.

attrib +h c:/test.* என்றிருந்தால் c யிலுள்ள test என்ற பெயருடைய எல்லா வகையான கோப்புக்களும் மறைக்கப்பட்டுவிடும்.

attrib +h c:/*.* எனின் c யிலுள்ள அனைத்து கோப்புக்களும் மறைக்கப்பட்டுவிடும். மீளவும் தெரியச் செய்ய attrib -h c:/*.* என்று கொடுக்க வேண்டும்.


**டிறைவர் ஒன்றின் volume பெயரினை அறிதல்**

கட்டளை : vol

முறை : vol டிறைவர்:/

உதாரணம் : vol c:/ என்றால் c டிறைவருக்கு நீங்கள் வழங்கியுள்ள பெயர் தெரிய வரும்.

**தற்போதய திகதி அறிய**




கட்டளை : Date

முறை : Date

உதாரணம் :- c:/ > Date

**தற்போதய நேரம் அறிய**

கட்டளை : Time

முறை : Time

உதாரணம் : c:/ > Time

**தேடுதல்**

கட்டளை : Find

முறை : find [/c] [/v] [ /n] <"சொல் "> கோப்பு(முழுவதுமாக)

உதாரணம்: find /n "Ravi" C:/test/mytext.txt என்றிருந்தால் mytext என்ற கோப்பில் Ravi என்ற சொல் கொண்டுள்ள Line களின் இலக்கங்கள் தரப்பட்டு அந்த Line இலுள்ள அனைத்தும் தெரியும். /n இதற்குப்பதில் /v போட்டிருந்தால் குறித்த Ravi என்ற சொல் கொண்டுள்ள Line கள் தவிர்ந்த அனைத்து விடயங்களும் திரையில் தெரியும். /n

தொடர்ச்சி 19ம் பக்கம்

# ட்ரோஜன் குதிரை பற்றிய கதை தெரியுமோ?



Trojan Horse அல்லது மல்வயார் எனப்படும் மர்ம மென்பொருள்கள் உங்கள் கணினியிலிருந்து கொண்டே உங்களை பற்றிய தகவல்களை யாருக்கோ வழங்கி உங்கள் காலை வாரிக் கொண்டிருக்கலாம். எனவே இணைய இணைப்பை உடனே துண்டித்து நீங்கள் உங்கள் கணினியை வைரஸ் ஸ்கான் செய்தாக வேண்டும்.

இணையத்தை ஒரு சுற்று மேய்ந்து விட்டு, சில பல தெரிந்த தெரியாத மென்பொருள்களை விளையாட்டாக இறக்கம் செய்து இயக்கிவிட்டு தூங்கிப்போனீர்கள். திடீரென விழித்து பார்த்தால் உங்கள் கணிணி ஹார்ட்டிரைவ் லைட் மின்னி மின்னி பிஸியாக இருக்கின்றது. மொடம் லைட்டுகள் பலவாறாக மின்னிக் கொண்டே இருக்கின்றன. ஏதோ மர்மம் அங்கு நடப்பது போல் காட்டுகின்றது. நீங்கள் நினைப்பது போல் இது ஒரு சாதாரண விசயமில்லை. உங்கள் கணிணியில் என்னமோ அசாதாரணம் நடப்பதையே இது காட்டுகின்றது. உசாராக வேண்டிய தருணம் இது Trojan Horse அல்லது மல்வயார் எனப்படும் மர்ம மென்பொருள்கள் உங்கள் கணினியிலிருந்து கொண்டே உங்களை பற்றிய தகவல்களை யாருக்கோ வழங்கி உங்கள் காலை வாரிக்கொண்டிருக்கலாம். எனவே இணைய இணைப்பை உடனே துண்டித்து நீங்கள் உங்கள் கணிணியை வைரஸ் ஸ்கான் செய்தாக வேண்டும்.

அது சரி, இது மாதிரியான நமது கணிணியின் உள்ளிருந்தே நமக்கு உலைவைக்கும் மென்பொருள்களுக்கு ட்ரோஜன் கோர்ஸ் என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா? அதற்கு சுவையான கதை ஒன்று உள்ளது.

கிரேக்க இதிகாசக் கதை ஒன்றின் படி, கிரேக்க தேசத்து அழகியான கெலனையும் அந்நாட்டின் செல்வங்களையும் ப்ரயம் மன்னனின் மகனான பாரீஸ் என்னும் இளவரசன் தன் ட்ரோஜன் நகருக்குக் கடத்திச் சென்றுவிட்டான். இதனால் கிரேக்கர்களுக்கும் ட்ரோஜனியர்களுக்கும் இடையே கடும் யுத்தம் வந்தது. 12 வருடங்கள் நீடித்த இப்போரை வெல்வதற்கு கிரேக்கர்கள் ஓர் தந்திரத்தைக் கையாண்டனர். அடியில் சக்கரம் வைக்கப்பட்ட ஓர் பிரமாண்டமான மரக்குதிரையைச் செய்து அதன் வயிற்றுக்குள் போர்வீரர்களை நிறைத்து வைத்து அதை போர்க்களத்துக்கு இழுத்துச் சென்றனராம். போர் நடந்து கொண்டிருந்தபோது கிரேக்கர், குதிரையைக் போர்களத்திலேயே விட்டு விட்டு தோற்றுப் போனவர்கள் போல் ஓடிவிட்டனர். இதனைக்கண்ட ட்ரோஜன் வீரர்கள், கிரேக்கர்கள் தோற்றுப்போய்விட்டதாக நினைத்து குதிரையை தமது பாதுகாக்கப்பட்ட நகருக்குள் இழுத்துச் சென்று தமது வெற்றியை விமர்சையாக கொண்டாடினர். ஒரேயொரு குருட்டு மதகுரு மட்டும் அதன் உள்ளே ஆபத்து ஒளிந்திருக்கிறது என்று கத்தினானாம். யாரும்

தொடர்ச்சி 28ம் பக்கம்

# நம்பமுடியாத அதிவேக ஒன்லைன் அகராதி

**சராசரியாக 14 மைக்ரோசெக்கன்களில் வருகிறது என்று இவர்கள் வாக்குறுதியும் அளிக்கிறார்கள்.**




முன்பெல்லாம் ஒரு வார்த்தைக்கு அர்த்தம் தேட வேண்டும் என்றால் மிகவும் பிரபலமான அகராதி **OXFORD Dictionary** தான். பிறகு சில மென்பொருட்கள் வந்தன. அனால் அந்த மென்பொருட்களை நிறுவினால் தேவையில்லாத **RAM** மற்றும் கணினியின் பயன்பாட்டு வேகம் குறைவதால் சிலருக்கு பிடிப்பதில்லை. அப்படிபட்டவர்களுக்காகத்தான் **Definr** அறிமுகப்படுத்துகிறது நம்பமுடியாத அதிவேக ஒன்லைன் அகராதி. இதில் ஒரு வார்த்தைக்கான அர்த்தம் சராசரியாக 14 மைக்ரோசெக்கன்களில் வருகிறது என்று இவர்கள் வாக்குறுதியும் அளிக்கிறார்கள். மேலும் சராசரியாக அந்த சேர்வரில் 10000 வார்த்தைகள் **cache** நினைவகத்தில் இருப்பதால் உடனுக்குடன் பதில்கள் வருவதாக கூறுகிறார்கள்.

இப்படி அதிவேக ஒன்லைன் அகராதி இருக்க நீங்கள் ஏன் **Dictionary.com, Google.com** பயன் படுத்தவேண்டும். நான் சொல்வது உண்மையா இல்லையா நீங்களே ஒரு முறை இந்த தளத்தை பார்வையிடயும். http://www.definr.com/

# உலகின் முதல் இணையதளம்?

## http://info.cern.ch



செவ்வாய் கிரகத்தில் தெரியாது. ஆனால் பூமியில் டிசம்பர் 1990 கணக்குப்படி ஒரே ஒரு இணையதளம் தான் இருந்தது. அதன் முகவரி info.cern.ch அதற்கு சொந்தக்காரர் www-வை அதாவது html-ஐ கண்டு பிடித்த Tim Berners-Lee ஆவார். இன்றைக்கு வெப் 2.0 வெப் 3.0 வென போய்கொண்டிருக்கின்றோம். ஆனாலும் அன்றைக்கு அவர் முதன்முதலாய் நெய்த அந்த வலைப்பக்கத்தை இன்றைக்கும் பத்திரமாய் வைத்திருக்கின்றார்கள். நீங்கள் கீழ்கண்ட முகவரியில் போய் அதை பார்க்கலாம்.

http://www.w3.org/History/19921103-hypertext/hypertext/WWW/TheProject.html 1990-ல் இவ்வெளிய பக்கத்தை உருவாக்க உங்களுக்குத் தெரிந்திருந்தால் நீங்கள் தான் பூமிப்பந்தை இணைய வலையில் சிக்கவைத்த ஜீனியஸ் சிலந்தியாய் இருந்திருப்பீர்கள்.

# கூகிள் அட்சென்ஸ் உம் இந்தியரும்



இந்த மே மாத கணக்குப்படி இணைய உருண்டையின் மொத்த இணையதளங்களின் எண்ணிக்கை என்ன தெரியுமா? 168,408,112 அபாரமானமான வளர்ச்சிதான். இத்தனை வெப்தளங்கள் உருவாக பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் ஒரு முக்கிய காரணமாய் அமைந்தது கூகிளின் அட்சென்ஸ் (www.Google.com/Adsense) என்றால் மிகையாகாது.

தங்கள் இணையதளங்களில் ஓடும் விளம்பரங்களை கிளிக்செய்தால் மாதம் தோறும் காசோலை வீடு தேடி வரும் என்றதும் மாணவன் கூட இணையதளம் தொடக்கினான். பல வெப்வித்தைகளை காட்டி சட்டம் சட்டமாய் விளம்பரங்களைப் போட்டு. ஆடை அணிகலன்களோடும் நிர்வாணமாயும் ஆயிரம் ஆயிரம் தளங்கள்.

இத்தனை வெற்றிகரமான கூகிளின் அட்சென்ஸ் புரெஜெக்ட் இனை முன்னின்று நடத்தியவர் ஒரு இந்தியர் என்பது நமக்கெல்லாம் தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் பெயர் கோகுல் ராஜாராம் (Gokul Rajaram). 2003-ல் கூகிளின் இந்த நுட்பம் வெளிவந்த பின்பு தான் கூகிளுக்கு காசு கொட்டோ கொட்டென கொட்டத் தொடங்கியது. பின்னர் இணைய காட்டுக்கு இன்றுவரை கூகிள் தான் ராஜா. ராஜாராம் கான்பூர் IIT யில் B.Tech முடித்து பின் MIT Sloan School of Management-ல் M.B.A-யும் M.Sc. in Computer Science-ம் முடித்தவர். ஆனாலும் கோகுல் ராஜாராம் கூகிளை விட்டு வெளியேறி இனி தானே தனக்காக உழைக்கப்போவதாக chailabs.com தொடங்கியிருக்கிறார். அதன் விவரங்களெல்லாம் இப்போதைக்கு ரகசியமே. எதாவது வியப்பாய் சீக்கிரமாய் கொண்டு வருவார் என எல்லோரும் எதிர்பார்க்கின்றார்கள்.


இன்றைக்கு Google Adsense-ன் நிலமை அவ்வளவு பிரகாசமாய் இல்லை. மைஸ்பேஸ்.கொம் சிறுவர்கள் கும்பலை நம்பி மில்லியன்களை கூகிள் செலவழித்து கையை தானே சுட்டுக் கொண்டிருக்கிறது. வருமானமும் குறைவு. கொஞ்ச காலமாய் முன்னேற்றமே இல்லை. இப்படி அநேக முறைப்பாடுகள்.

---

**அவதானம்**

**உங்களுக்கு பரிசு விழுந்து விட்டது என்று சொல்லப்படவோ விசா கிடைத்துவிட்டது என்று சொல்லப்படவோ வரும் மின்னஞ்சல்களை நம்பி ஏமாந்து விடதீர்கள் இவை அனைத்தும் போலியானவை உங்களை வம்பில் மாட்டிவிடும்**

# ஆசியாவின் சூப்பர் கணினி



முன்பெல்லாம் கணினி பெட்டிக்குள் ஒரே ஒரு CPU மட்டுமே இருக்கும். பின்னாளில் ஒன்றுக்கு இரண்டு சிபியூக்களை உள்ளே வைத்து அதை Dual-Processor அல்லது two-way SMP என்றார்கள். பொதுவாக இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட சிபியூக்களை கணிப் பொறிகளில் பயன்படுத்துதல் சேவர் களிலேயே வழக்கமாக இருந்து வந்தது. நாம் அப்படி என்ன பண்ணி கிழிக் கிறோமோ தெரியவில்லை, நாளுக்கு நாள் கணினித்திறன்


**வெறுமனே சிறு வேலைகளை செய்ய அல்லது படம்பார்த்து பாட்டுக்கேட்க Quad core தான் (4 சிபியூ கோர்கள்) வேண்டுமென நாம் அடம்பிடித்தல் கொஞ்சம் ஓவர் தான்.**

நமக்குகூட அதிகமாக தேவைப்பட்டுக் கொண்டே வருகின்றது. அதனால்தான் இன்றைய வீட்டுக்கணினிகள் கூட ஒன்றுக்கு இரண்டு சிபியூக்களை கொண்டு வருகின்றன. ஆனாலும் இரண்டு தனித்தனி சிப்பியு சிப்புகளாய் இல்லாமல் ஒரே சிப்பில் இரண்டு சிபியூக்களும் அமர்ந்திருக்கும் வகையாய் வருகின்றன. இதைத் தான் டுயல்கோர் (Dual core) என்கின்றோம். பெரும்பாலும் Multithreaded பயன்பாடுகளே இதன் பலனை நமக்களிப்பதால் அதிக வித்தியாசம் ஒன்றும் நமக்கு தெரிவதில்லை.

மற்றபடி வெறுமனே சிறு வேலைகளை செய்ய அல்லது படம்பாத்து பாட்டுக்கேட்க Quad core தான் (4 சிபியூ கோர்கள்) வேண்டுமென நாம் அடம்பிடித்தல் கொஞ்சம் ஓவர் தான். 28 TB நினைவகத்தோடு கூடிய 14400 கோர்கள் உள்ள ஒரு கணினி பற்றி கேள்விப் பட்டிருக்கின்றீர்களா? நம் ஊரின் சூப்பர் கம்யூட்டர்தாங்க அது. அதன் பெயர் EKA. புனேயிலுள்ளது. Tata Sons Limited-ன் Computational Research Laboratories-க்கு சொந்தமானது.


இதிலுள்ள மின்சார கேபிள்கள் மட்டுமே 10கிமீ தூரத்துக்கு வருமாம். இது ஆசியாவின் சக்திவாய்ந்த முதல் சூப்பர்கணினியாகும். உலக அளவில் இதற்கு நான்காவது இடம். யாகூ தனது Cloud Computing ஆய்வுக்கு இதை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக தெரிகின்றது. இவ்வளவு பெரிய கணினியில் ஓடும் ஒப்பரேட்டிங் சிஸ்ரம் என்னவென நினைக்கின்றீர்கள்? லினக்ஸ் தான்.

## உள்ளங்கைக்கு காற்று வீசும் மவுஸ்



வழக்கம்போல், மவுஸ்களில் புதிய மொடல்கள் அறிமுகமாகிக்கொண்டே இருக்கின்றன. சமீபத்தைய மொடல், நிகோவின் (NYKO) காற்று வீசும் மவுஸ(Air flow mouse). பொதுவாக மவுஸைப் பிடித்து வேலை செய்பவர்கள் மற்றும் விளையாடுபவர்களுக்கு உள்ளங்கை வியர்க்கத் தொடங்கிவிடும். அந்த வியர்வை ஏற்படாமல் இருக்க, இந்த புதிய மவுஸில் சின்ன விசிறி பொருத்தப்பட்டிருக்கிறது. லேசாக உள்ளங்கைக்கு மட்டும் காற்று வீசுமாம்!

## டுவோ போன்



**ஒரு பக்கம் இது சாதாரண வீடியோ போன். மற்றொரு பக்கம் இதையே மவுஸாகவும் ரிமோட் கொன்ட்ரோலாகவும் பயன்படுத்தலாம்.**

டுவோ பி.சி (Duo-PC) மற்றும் டுவோ போன் (Duo-phone) என்பது அடுத்தகட்ட கண்டுபிடிப்புகள். டுவோ பி.சி என்பது இரண்டு வேலைகளைச் செய்யக்கூடியது. இதை மேஜை மேல் வைத்து, நீங்கள் கணினியாகவும் பயன்படுத்தலாம். அல்லது வண்டியில் போகும்போது குறுக்காக வைத்துக்கொண்டு மின்புத்தகங்களையும் படிக்கலாம். டுவோ போன் என்பது இரண்டு வேலைகளைச் செய்கிறது. ஒரு பக்கம் இது சாதாரண வீடியோ போன். மற்றொரு பக்கம் இதையே மவுஸாகவும் ரிமோட் கொன்ட்ரோலாகவும் பயன்படுத்தலாம்.

ஒருபக்கம் இதையெல்லாம் வெறும் கற்பனை, நடைமுறைக்குச் சாத்தியமில்லாதவை, யார் வாங்கப் போகிறார்கள் என்று சொல்லி விடலாம். ஆனால், டிஜிட்டல் உலகம் போகும் வேகத்தில் நேற்று கற்பனையாக இருந்ததெல்லாம் இன்று நிஜமாகியிருக்கின்றன. இன்று கற்பனையாகத் தோன்றக்கூடியவை, நாளை உண்மையாகலாம். மேலும் இவையெல்லாம் வெறும் டிசைன்கள் மட்டுமல்ல் வேலைசெய்யக் கூடிய முழுமையான கருவிகள். இந்தக் கருவிகள் மெல்ல மெல்ல செழுமை பெற்று சந்தைக்கு வரும்போதுதான், அந்த கற்பனையின் வீரியம் புரியும்.

---

ஒரு சொல்லின் கருத்தை அறிய கூகிள்.கொம் ஒரு வழி விட்டிருக்கிறது நீங்கள் செய்யவேண்டியது இதுதான் www.google.com என்ற தளத்தில் உள்ள தேடுதல் பெட்டியில் define:உங்கள்சொல் என்றமுறையில் ரைப்செய்து தேடுதல் செய்யவேண்டும் உதாரணமாக define:computer என ரைப் செய்து தேடினால் Computer என்பதற்கான கருத்து கிடைக்கும்

# பாடல் திருட்டு நிலைக்குமா?

**ஒருவேளை 2010–ல் வெளியாகவிருக்கும் சூப்பர் ஸ்டாரின் திரைப்பட MP3 அத்தனை எளிதாய் உங்களுக்கு கிடைக்காமல் போகலாம்..**



பழைய பாட்டுகள் மட்டுமல்லாது புது பாடல்களும் கிடைக்கின்றன. ஆச்சர்யமாய் சில புதுப் படங்களின் பாடல்கள் அவர்கள் வெளியிடும் முன்னரே இணையத்தில் வந்துவிடுகின்றது. இப்படியே போனால் வீடியோக்களின் கதையும் மென் புத்தகங்களின் கதையும் அப்படியே ஆகிவிடும் போலிருக்கின்றது. வேர்க்க வேர்க்க அதனை உருவாக்கிய படைப்பாளி அவனுக்கான கூலியை பெற்றுக் கொள்ளமுடியாமல் போகின்றான். ஒரே கிளிக்கில் புத்தம் புது MP3களை இலவசமாய் இறக்கம் செய்யும் போது நம் போன்ற பொது சனம் அறியாமையினாலோ என்னவோ குற்றமனப்பான்மை கொள்வதில்லை. அதற்கு பதிலாக எளிதாய் இலவசமாய் கிட்டிய மகிழ்ச்சியே கொள்கின்றோம்.

இப்படி சில்லறை சில்லறையாக தயாரிப்பாளர்களுக்கு கோடிக் கணக்கில் இழப்பு. இது இப்படியிருக்க இந்த திருட்டுக்கெல்லாம் முடிவு கட்ட பெருசுகள் கூட்டம் கூடி கட்டம் கட்டி பேசி ஒரு முடிவுக்கே வந்து விட்டார்கள். அதன் பெயர் தான் Digital rights management அதாவது DRM.


ஒருவேளை 2010-ல் வெளியாகவிருக்கும் சூப்பர் ஸ்டாரின் திரைப்பட MP3 அத்தனை எளிதாய் உங்களுக்கு கிடைக்காமல் போகலாம்.. வேறு ஒருவர் வாங்கிய பாடலை புத்திசாலித்தமாய் எனது ஐஅவரது இணையத்தளம் வழி உங்களுக்கு வழங்கினால் நீங்கள் பதிவிறக்கம் செய்வீர்கள். ஆனால் அந்த பாடல் இசைக்காது. பதிலாய் அது ஒன்லைன் போய் அங்கு அனுமதி வாங்க உங்களை நச்சரிக்கும். அது அவரது கணினியில் மட்டுமே பாடும் படி வடிவமைக்கப்பட்டதாய் இருக்கும். இது தான் டிஆர்எம்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

# கையுறைக்குள் மெட்டல் டிடெக்டர்

இந்த கண்டுபிடிப்பு கொஞ்சம் வித்தியாசமானது. இப்போது எங்கே பார்த்தாலும்தான் வெடிகுண்டு வைக்கிறார்களே... எல்லா இடங்களிலும் காவல்துறையினர் மெட்டல் டிடெக்டர் வைத்து மேலும் கீழும் தடவிப் பார்த்தே அனுப்புகிறார்கள். இந்த மெற்றல் டிடெக்ரரையே அவர்கள் அணியும் க்ளவுஸிற்குள் (கையுறை) திணித்துவிட்டால்... செய்யலாமே? செய்துவிட்டார்கள்! மெற்றல் டிடெக்ரர் க்ளவ்ஸ்கள் இப் போது புழக்கத்துக்கு வந்துவிட்டன. சோதனை செய்வது இப்போது இன்னும் எளிதாகியிருக்கிறது.

# கண்ணாடி இராஜ்யம்!



நமது டிஜிட்டல் பிரம்மாக்களுக்கு எப்போதுமே மூக்குக் கண்ணாடி மேல் ஒரு கண் இருந்துகொண்டே இருக்கும், கண்ணாடியை இன்னும் பலவற்றுக்கும் பயன்படுத்துகிறார்கள். உதாரணமாக, பாட்டு கேட்பதற்கு. கண்ணாடியோடு சேர்ந்த எம்.பி 3 பிளேயரை பலர் உருவாக்கியிருக்கிறார்கள். கண்ணாடியின் பட்டிகளில் எல்லா பொத்தான்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனை உங்கள் கணினியோடு கம்பியில்லாமல் தொடர்புபடுத்திப் பாடல்களை டவுன்லோட் செய்து கொள்ளலாம். கிட்டத்தட்ட 240 பாடல்கள் வரை இதில் சேமித்துக்கொள்ளலாம்!

கண்ணாடி மூலம் பாட்டுக்கேட்க முடியும்போது, போட்டோ எடுக்க முடியாதா? HP நிறுவனம் தயாரித்துள்ள சமீபத்திய கமரா, ஒரு அணியக்கூடிய கண்ணாடி கமரா. செக்கனுக்கு 7 படங்கள் எடுக்கத்தக்க இந்த கமராவில், மூன்று மணிநேரம் வரை தகவல்களைச் சேமிக்க முடியும். இப்போதைக்கு ஒரு மாதிரியாக இது அறிமுகமாகியிருக்கிறது. சேமிக்கும் திறனும் துல்லியமும் அடுத்து வரும் முன்னேற்றங்களில் ஏற்படும்.

# கைகொடுக்கும் காலணி!



இன்னொரு புரட்சிகரமான கண்டுபிடிப்பு, மகளிருக்கானது. அதுவும் காலணியில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காலணியில் அலாரம் அடிப்பதற்கான அமைப்பும், ஜி.பி.எஸ். சிஸ்ரமும் பொருத்தப் பட்டிருக்கின்றன. அப்பெண்கள் ஏதேனும் ஒரு பிரச்னையில் மாட்டிக்கொண்டால், உடனடியாக அபாய மணியை அடிக்கலாம். அல்லது காணாமல் போய்விட்டால், தாங்கள் எங்கே இருக்கிறோம் என்று தகவல் தெரிவிக்கலாம் என்றெல்லாம் இந்தக் காலணி கொஞ்சம் புதுமையாக இருக்கிறது. மேலும் இதற்குள்ளேயே சின்னத் திரையும் ஸ்பீக்கர்களும் பொருத்தப்பட்டிருக் கின்றன. தேவையான படங்களையோ பாடல்களையோ இணையத்தில் இருந்து டவுன்லோட் செய்துகொள்ளலாமாம்! அணியக்கூடிய தொழில்நுட்பம் என்பது இப்படியெல்லாம் விஸ்வருபம் எடுத்துக் கொண்டிருக்கும் அதேசமயம், பலமான விமர்சனங்களையும் சந்தித்தே வருகிறது.

# கருத்துப்பெட்டி

சஞ்சிகையில் வெளி வருகின்ற படைப்புக்கள் பற்றி எழுதப்படும் கடிதங்களில் ஒன்று தெரிவு செய்யப்பட்டு அதை எழுதியவருக்கு 3 மாத இதழ்கள் இலவச மாக அனுப்பி வைக்கப் படும். உங்கள் கருத்துக் களை **077-7563213** என்ற இலக்கத்திற்கு SMS ஊடாகவும் அனுப்பலாம்.




யாழிலே உதித்த சூரியனே,
உனக்கு நிகர் யாரு? நீ யாழ் மக்களின் மனதிலே குடி கொண்டவனே. கணினியின் அறிமுகத்தையே அறிமுகப்படுத்தினாய். இதனால் நீ எப்பொழுதும் யாழ் மக்களின் முதல் மனம் கவர்ந்த கணினி பத்திரிகை ஆவாய் **-சி.மினோசன் யாழ்ப்பாணம்-**

குறைகளை பவ்வியமாக சுட்டிக்காட்டி நீண்ட மடலை ஜே.திவாகரன்.கொக்குவில் இந்துக்கல்லூரி அனுப்பியிருந்தார்விடயங்களை கவனத்தில் கொள்கின்றோம் (இடப்பற்றாக்குறையால் முழுவதையும் போடமுடியவில்லை நன்றிகள் -ஆசிரியர்-)

உங்கள் ஆக்கங்கள் சூப்பர். மற்றும் இடையிடையே வரும் Tips, செய்தித் துளி தருவது எல்லோருக்கும் நற்பயனானது. ஆனால் இதழ் பிந்தி வருவது எம்மை ஏக்கத்திற்கு உள்ளாக்குகின்றது. Late ஆக வந்தாலும் Latest ஆக இருக்கு. மேலும் மேலும் வளர என் வாழ்த்துக்கள். **அஜந்தன் சுழிபுரம்**

நான் ஆரம்பத்திலிருந்து உங்கள் இதழை வாசித்துவருகிறேன் இதழின் வளர்ச்சி சிறப்பாக உள்ளது.யாழில் கைத்தொலைபேசி பாவனை கணினி பாவனையுடன் ஒப்பிடும்போது மிகமிக அதிகமாகவுள்ளது.இதனால் கைத்தெலைபேசி பழுதுபார்த்தல்,மென்பொருள்இடல் போன்றவற்றிற்கு நல்ல வரவேற்புள்ளது.ஆகவே Mobile phone Hardware,Software பற்றிய விடயங்களையும் சேர்த்துக் கொண்டால் மிகவும்பயனுள்ளதாகவும் வரவேற்கத்தக்கதாகவும் இருக்கும் என நம்புகிறேன் **-வி ரூபன் யாழ்ப்பாணம்**

**சிறந்த கருத்தைக்கூறி மூன்று மாத இதழ்களை(9 இல் இருந்து) பரிசாக பெறும் வாசகர்**
**- ஜே.திவாகரன்.கொக்குவில் இந்துக்கல்லூரி -**

கருத்து மடல்கள் குறுஞ்செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் எமது நன்றிகள் உங்களிடமிருந்து ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன ஆ-ர்



உலகமெங்கும் உறவுகளை சென்றடையும் விளம்பரங்கள்
இன்ரநெற்றில் புதியது! தமிழர்களுக்கே உரியது!
விளம்பரம்.நெற் > www.vilamparam.net
துயர் பகிர்வு
திருமணம்
பிறந்தநாள்
பாராட்டு
நன்றி நவிலல்
வாழ்க்கைத்துணைதேடல்
விழாக்கள்
மற்றும் நிகழ்வுகள்
உள்ளிட்ட சகலவித விளம்பரங்களையும்
குறைந்த செலவில் உலகமெங்கும் பிரசுரிக்க
இணையத்தில் நிகரில்லா இடம்!
உங்கள் சகலரதும் கவனத்தையும் ஈர்க்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு முயற்சி
இணையத்தில் தமிழ் தேடலுக்கு கூகிள்தமிழ்.கொம் [googletamil.com]
இலவச திருமணசேவைக்கு மாலை.கொம் [maalai.com] என
புதிய சேவைகளை அறிமுகப்படுத்திய Speed IT net நிறுவனத்தின் புதியசேவைதான் இது!
ஒரு கிழமைக்குரிய அலகு கட்டணங்களும்(இலங்கை ரூபா)
அடிப்படை விளம்பர அளவுகளும்
# 468x30 pixel (16x1 cm) -Rs 100
# 160x30 pixel (6x1 cm) -Rs 100
# 120x30 pixel (4.5x1 cm) - Rs 80
# 778x30 pixel (27.5x1 cm) - Rs 200
24/7 Online
email@vilamparam.net
For Yahoo chat
thavaonline
விளம்பரம் .நெற்
@ எந்நாட்டிலிருந்தும் விளம்பரம் செய்யும் வாய்ப்பு !
@ கிரடிட் கார்ட் மூலமாக பணம் செலுத்தும் வசதி !
@ கிரடிட் கார்ட் இல்லாதவர்களுக்கு பணம் செலுத்தும் வேறுவழிகள் !
@ உலகளாவிய ரீதியில் மிகக்கூடிய பார்வையாளர்களை ஈர்க்கும் வாய்ப்பு
www.vilamparam.net
இன்றே அழையுங்கள் : (0094) (777) 563213
(0094) 214591871 / 0094 602010832
SPEED IT NET "Quick Way to Online"
இல 72/28 பணிக்கர் ஒழுங்கை பலாலி வீதி திருநெல்வேலி யாழ்ப்பாணம் இலங்கை
www.speeditnet.com 0094777563213. 0094214591871 biz@speeditnet.com

உலகளாவிய ரீதியில் உங்களை , உங்கள் பிரதேசம் , நிறுவனம் ஆலயம் ,வியாபார நிலையம், போன்றவற்றை பிரபல்யப்படுத்த வேண்டுமா? ஒரே வழி இணையத்தளம் ஒன்று அமைத்துக் கொள்வது தான்...



இலங்கையின் முன்னணி நிறுவனமும் யாழில் ஒரே ஒரு இணைய நிறுவனமும் உலகளாவிய ரீதியில் 300 இற்கு மேற்பட்ட இணையத்தளங்களை பதிவுசெய்து வழங்கிய நிறுவனமுமான எமது நிறுவனத்தில் உங்களுக்கான அழகிய இணையத்தளத்தினை மிகக்குறைந்த செலவில் நிறுவிக்கொள்ளுங்கள்

.com .org .net .uk .in .lk எதுவானாலும் ஒரே நாளில் பதிவு செய்யலாம்
விண்டோஸ் மற்றும் லினக்ஸ் சேவர் ,MYSQL ,MS SQL,ASP/PHP வசதிகள்

மானிப்பாய் மருதடி பிள்ளையார் ,மீசாலை சித்திரவேலாயுதர்
ஆலயங்களுக்கான இணையத்தளங்களை நிறுவிய சாதனை
நாம் பதிவுசெய்த ஏனைய தளங்கள் பற்றிய விபரங்களை
http://sites.speeditnet.com எனும் முகவரியில் பார்வையிடலாம்

**Speed IT Net** உங்களை எதிர்கால ஊடகமான இணையம் வழி அழைத்துச்செல்ல தயாராக உள்ளது நீங்கள் தயாரா?




# ஸ்பீட் ஐ.ரி நெற்

72/28 பணிக்கர் லேன் ,பலாலி வீதி உட்புறம் திருநெல்வேலி யாழ்ப்பாணம்

கையடக்கம்: 0777 563213 தொலைபேசி: 021 4591871

மின்னஞ்சல்: biz@speeditnet.com இணையத்தளம்: www.speeditnet.com